# சஞ்சிகை

கலை, இலக்கிய சூழலியல் சிற்றிதழ்

ஆடி | ஆகஸ்ட் 2018

தனிச்சுற்றுக்கு மட்டும்

Q PROMOS Group



**மழை மற்றும் வெயில் போன்ற கால மாறுதல்களால்**
**உங்கள் வீட்டின் மேல் தளத்தில்**

**கான்கிரீட் நீர் கசிவு,**

**சுவர் விரிசல்,**

**பெயின்ட் உறிந்து வருதல்,**



**தண்ணீர் தொட்டி நீர்க் கசிவு,**

**கம்பி துருப்பிடித்தல்**

**ஓதம் அடித்தல்,**

**மேல்தளம் பாசம் பிடித்தல் போன்றவை ஏற்படலாம்.**

*உங்கள் கட்டிடங்களின் உட்புற, வெளிப்புற சுவர்களுக்கு வாட்டர் ஃப்ரூப் மற்றும் ஹீட் ஃப்ரூப் பெயிண்டிங்கை உங்கள் பட்ஜெட்டிற்கு ஏற்றார் போல் செய்து தருகிறோம்.*

# அனிகா
## பில்ட் கேர் சிஸ்டம்ஸ்



வெய்யில் காலத்தில் ஜில்லென்றிருக்க...

வீட்டிற்குள் வெப்பம் இறங்காமல் தடுக்க..

ஃபேன் ஓடும்போது வெப்பக் காற்று இல்லாமல் இருக்க..

*அனிகா பில்ட் கேர் சிஸ்டம்ஸ்*

*51/215, அண்ணாநகர், மெயின்ரோடு, பழனி - 624601.*

*செல்: 95669 49409, 95004 22296*

சஞ்சிகை
சிற்றிதழ்
தனிச்சுற்றுக்கு மட்டும்

**இதழ் 35**
**ஆவணி | ஆகஸ்ட் 2018**

**ஆசிரியர்**
கோ. முருகராஜ்

**ஆசிரியர் குழு**
அருண் நெடுஞ்செழியன்
சித்திரவீதிக்காரன்
கவி இளவல் தமிழ்
ராம் முரளி
சு. ரகுநாத்
பிரபு ராஜேந்திரன்
பா. உதயகுமார்

**அட்டைப்பட ஓவியம்**
ரம்யா

**இதழ் வடிவமைப்பு**
கோ. முருகராஜ்

**முகவரி**
சஞ்சிகை
10A வஜ்ராஸ் அபார்ட்மென்ட்,
8A/13, லக்ஷ்மி ரோடு,
டி.வி.எஸ். நகர்,
மதுரை 625003

**தொடர்புக்கு**
95007 80688

**மின்னஞ்சல்**
sanjigai@gmail.com

**வலைப்பூ**
www.sanjigai.wordpress.com

**ஃபேஸ்புக் முகவரி**
www.facebook.com/sanjigai

**நன்கொடை**
**தனி இதழ் - ரூ.20/-**
**ஆண்டுச்சந்தா - ரூ. 200/-**

# எழுத்தின் நோக்கம்

இலட்சக்கணக்கான எழுத்தாளர்கள், கோடிக்கணக்கான கதைகளை எழுதி வருகின்றனர். அவர்கள் தொடாத துறை எதுவும் இல்லை. இப்படிப்பட்ட சூழலில் ‘நான் ஏன் எழுதுகிறேன்’ என்று அடிப்படி நினைப்பதுண்டு. இப்போது புரிந்து கொண்டேன். மற்றவர்கள் எழுதுவதைப் போல் நான் எழுதுவதில்லை. எதாவது ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறபொழுது எழுத நினைக்கிறேன். வித்தியாசமான முறையில் சொல்ல நினைக்கும் காரணத்தினாலும் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

நான் எந்தவொரு இலக்கையும் வைத்துக் கொள்வதில்லை. படிப்பவர்களுக்கு செய்தியைக் கொடுப்பதல்ல என் நோக்கம். ஒரு கரு அல்லது ஒரு சிக்கலைக் கலை நயத்துடன் படிப்பவர்கள் முன் காட்சிப்படுத்தலின் மூலம் அந்தப் பொருள் மற்றும் சிக்கல் குறித்த விழிப்புணர்வைப் படிப்பவர்களிடம் ஏற்படுத்தி அதற்கான தீர்வுகளை வாசகர்களே தங்கள் சொந்த அனுமானங்கள் மூலம் நிரப்பிக் கொள்ளுதலை எதிர்நோக்கியுமே நான் கதைகளைப் படைக்கிறேன்.

கொங்கணி எழுத்தாளர்
தாமோதர் மாவ்ஜோ



# மேற்கிலிருந்து வந்த செம்பரிதி

■ சித்திரவீதிக்காரன்

மதுரை ரயில்நிலையம் திருவிழா போல களைகட்டியிருந்தது. அவரை வழியனுப்ப ஏராளமானோர் வந்திருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள். அவரை அறியாதவர்கள்கூடக் கேட்டறிந்து வந்து வணங்கி நின்றார்கள். நீலநிறக் கவுனும், பழுப்புநிறச் சிகையும், கண்ணாடிக்கு உள்ளிருந்து தீர்க்கமான பார்வையும், உதட்டில் புன்சிரிப்புமாய் தன்னை நோக்கி வருபவர்களின் கரம் பற்றி நெகிழ்வோடு விடை கொடுத்துக் கொண்டிருந்தார் அவர். அமெரிக்காவின் கனெக்டிகட் மாகாணத்தில் பிறந்து பெண் கல்விக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்த கேட்டிவில்காக்ஸ் அம்மையார்தான் அவர். ரயில் புறப்படும்போது வாசலருகே வந்து நின்று கேட்டி அம்மையார் கையசைத்தபோது அவரது பிரிவை எண்ணி எல்லோர் கண்களிலும் நீர் துளிர்த்தது.

ரயிலில் சன்னலோரம் அமர்ந்து நகரை வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தார். நாற்பதாண்டு கால மதுரை வாழ்க்கை அவரையும் இந்நகரோடு நெருக்கமாக்கியிருந்தது. ரயில் மெல்ல நகர்ந்து செல்லச் செல்ல ஹார்வி (மதுரா) மில், கேப்ரன்ஹால் பள்ளி, வைகையாறு, செல்லூர் கண்மாய் அதைத் தாண்டி தொலைவில் தெரிந்த பனந்தோப்பையும் பார்த்துக் கொண்டே சென்றார். அந்த இடங்களுக்கும் அவருக்குமான தொடர்பு சொல்லுக்கடங்காது. ரயில் கரிசல்குளத்தைக் கடக்கும் போது பாத்திமா கல்லூரியைப் பார்த்த போது மதுரையில் பெண் கல்வி நன்றாக வேரூன்றிவிட்டதாக உணர்ந்தார்.

ரயில் முன்னே செல்லச்செல்ல அவர் நினைவுகள் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னோக்கி நகர 1915இல் கார்த்திகை மாதத்தில் முதன்முதலாக மதுரைக்கு வந்த காட்சிகள் நினைவிற்கு வந்தன. மதுரையை நெருங்கும்போது கூடவே

நாகம் போல நீண்டு தெரிந்த மலை, நீர்நிறைந்த கண்மாய்கள், வயலில் களை பறித்துக் கொண்டிருந்த பெண்கள், பெருக்கெடுத்து ஓடிய வைகைக் காட்சிகள் மெல்ல, மெல்ல நினைவுக்கு வந்தன. ஆற்றுப்பாளையம் பகுதியிலிருந்த பள்ளி நோக்கிச் சென்ற வழியில் பார்த்த வீடுகளிலெல்லாம் விளக்கேற்றி வைத்திருந்தார்கள். இரயிலை விட்டிறங்கி காரை வீடுகளிலிருந்து கூரை வீடுகள் வரை; வாசல், கிணற்றடி, மாட்டுக்கொட்டடம், மரத்தடி வரை; வெண்கல விளக்குகளிலிருந்து மண்குழியாஞ்சுட்டி வரை விதவிதமான விளக்குகளைப் பார்த்துக்கொண்டே வந்தார். உடன்வந்த ஆசிரியையிடம் யார், என்ன என்று விசாரித்த பாட்டி ஒன்று கைகளைத் தூக்கி கேட்டியின் முகத்தருகே கொண்டு சென்று நெட்டி முறித்து 'தாயி! மகராசியா இரும்மா!' என வாழ்த்தியதையும், மொழி புரியாவிட்டாலும் மேல்முழுக்க சுருக்கங்களோடு பொக்கைவாய்ச் சிரிப்போடு வாழ்த்திய பாட்டியின் கைகளை அன்போடு பிடித்துக் கொண்டதையும் நினைவுகூர்ந்தார் கேட்டி.

அச்சமயம் ரயில் மதுரையைக் கடந்திருந்தது. அருகிலிருந்த சகபயணியொருவர் ஆனந்த விகடனைப் பக்கத்திலிருந்தவரிடம் காட்டி சில்பி வரைந்த சித்திரத்தைக் சிலாகித்துக் கொண்டிருந்தார்.

லேடிடோக் கல்லூரியிலிருந்து அவருக்குக் கொடுத்த நினைவுப்பரிசை எடுத்துப் பிரித்துப்பார்த்தார். அதில் அவரே ஆச்சரியப்படும்படி அவரது பல நிழற்படங்களும், அதற்குப் பக்கத்தில் அவரைக் குறித்த பலரது நினைவுகளும் எழுதப்பட்டிருந்தன. ஒவ்வொரு பக்கமாகத் திருப்பிப் பார்க்கும் போதும் காலம் கரைந்து ரயிலைவிட வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. மேரிநாய்ஸ் உடன் கேட்டி எடுத்த நிழற்படத்தைப் பார்த்ததும் கேட்டி கேப்ரன்ஹால் பள்ளிக்கு முதல்முதலாகச் சென்ற நாளுக்குள் நுழைந்தார். அப்போது அப்பள்ளி முதல்வராகயிருந்த சகோதரி மேரிநாய்ஸ் அவரை ஓடிவந்து கட்டிப்பிடித்து வரவேற்றதோடு, கடவுள் அனுப்பி வைத்த தேவதை எனச் சொன்னதையும் மறக்கமுடியுமா என்ன? கடவுளின் குரலை ஏற்று மிஷினரிக்குச் சேவை செய்யத் தொடங்கி நாற்பதுக்கும் மேலான ஆண்டுகளைக் கடந்து பயணித்துக் கொண்டிருந்தார். ரயில் செல்லச் செல்ல வெயில் மெல்ல ஏறிக் கொண்டே வந்தது.



ஒவ்வொரு படங்களுக்குப் பக்கத்திலும் அவரைப் பற்றி எழுதப்பட்ட வரிகளை வாசித்தார். ஆங்கிலத்தையும், கணிதத்தையும் கதைபோல, விளையாட்டுப் போல சொல்லிக்கொடுத்த அவரது கல்வி முறையால் அப்பாடங்கள் மீது விருப்பம் வந்ததை எழுதியிருந்தார் கேப்ரன்ஹால் பள்ளியின் முன்னாள் மாணவியொருவர். அதேபள்ளியின் ஆசிரியையொருவர் கேட்டியைப் பார்த்துத்தான் சேரிகளுக்குச் சென்று சமூகசேவை செய்துவருவதாக எழுதியிருந்தார். கேட்டியிடம் பியானோ கற்ற ஓ.சி.பி.எம்.பள்ளி ஆசிரியை தனக்கிருந்த மனக்குழப்பத்தை அந்த இசை மீட்டதைக் குறிப்பிட்டிருந்தார். மதுரையில் முதன்முதலாகப் பள்ளிப் பேருந்தைக் கொண்டு வந்ததைப் பெருமையாகக் குறிப்பிட்டுருந்தார் நாய்ஸ் பள்ளி ஆசிரியையொருவர். பூனை போன்ற விலங்குகள் மீதான கேட்டியின் பாசம் தங்களையும் தொற்றிக் கொண்டதாக லேடிடோக் கல்லூரி மாணவி எழுதியதைப் படித்து மெல்ல புன்னகைத்துக் கொண்டார்.

ரயில் தடக்தடக்கென திருச்சி காவிரியாற்றைக் கடந்து கொண்டிருந்தது. ஆற்றங்கரையில் ஏதோ விழா போல மக்கள் கூடியிருந்ததைப் பார்த்தார். வைகையாற்றங்கரையில் புட்டுத்திருவிழாக் காட்சிகள் அவருக்கு நினைவுக்கு வந்தன. கேப்ரன்ஹால் பள்ளிக்குச் சற்றுத்தொலைவில்தான் புட்டுத்தோப்பு மண்டபம் இருந்தது. அதைநோக்கி தம்பட்டமாடு, கோயில்யானை முன்செல்ல கைலாய வாத்தியம் இசைத்து அடியவர்கள் ஆடிவர சாமி உலாப்போவதைப் பார்த்ததுண்டு. அதைக்குறித்து மாணவிகளிடம் உரையாடியபோது புட்டுத்திருவிழா கதையைச் சொன்னார்கள். வைகையில் வெள்ளம் வந்து கரையடைக்க வந்த சிவனின் கதையை ரசித்துக் கேட்டார். அவருக்கு நாடகம், நடிப்பு இவைகளில் எல்லாம் விருப்பம் அதிகம். அதேவேளையில் ஆற்றில் வெள்ளம் வந்தால் அக்கரையில் உள்ள மாணவிகள் பள்ளிக்கு எப்படி வருவார்கள் என்ற அக்கறையும் மனதில் உதித்தது



அப்போதுதான். ரயிலில் எதிரேயிருந்த ஒருவர் அருகிலிருந்தவரிடம் எம்.ஜி.ஆரின் அலிபாபாவும் நாற்பது திருடர்களும், மதுரை வீரன் படங்களின் வெற்றியைப் பற்றி மகிழ்வாகப் பேசியபடி வந்தார். இந்த ஊர் மக்கள் நடிகர்கள் மீதும், திரைப்படங்கள் மீதும் கொண்டிருந்த அபிமானத்தை வியந்து பார்த்தார்.வேடிக்கை பார்த்தபடி வந்த கேட்டியின் நாசியில் மெல்ல பனங்கிழங்கு வாசம் அடித்தது. அந்த வாசம் அவரைத் தல்லாகுளம் அருகிலுள்ள பனந்தோப்பிற்குள் கொண்டு சென்றது.

மேரி நாய்ஸூம், கேட்டியும் கோரிப்பாளையம் வரை டி.வி.எஸ் பேருந்தில் சென்றது, அங்கிருந்து இறங்கி குதிரை ஜட்கா வண்டியில் ஐம்புரோபுரம் பகுதியை அடைந்தது, அப்பகுதியில் வாழ்ந்த மக்களிடம் உரையாடியது, மெல்ல பனந்தோப்பினூடாக நடந்து வந்து சொக்கிகுளம் கண்மாய்க்கரை அரசமரத்தடியில் அமர்ந்தது எல்லாம் அவர் நினைவிற்கு வந்தன. அங்கு வைத்துதான் அவர்கள் ஆற்றுக்கு வடபுறம் கட்ட வேண்டிய பள்ளி கல்லூரி குறித்து திட்டமிட்டார்கள். எதிர்பாராத விதமாக சில வருடங்கழித்து மேரிநாய்ஸ் காலமாக, கேட்டி வில்காக்ஸ் கேப்ரன்ஹால் பள்ளி தலைமைப் பொறுப்பேற்றார். தங்கள் கூட்டுக்கனவான பள்ளியைக் கட்ட நிதி திரட்டப் பெரும்பாடு பட்டார். அமெரிக்காவிலிருந்து நிதி வருவதிலும் நிறைய சிக்கல்கள் இருந்ததால் பெரும் செல்வந்தர்களிலிருந்து முன்னாள் மாணவிகள் வரை தேடிச் சென்று சந்தித்து நிதி திரட்டிய நாட்கள் நினைவிற்கு வந்தன. ஓ.சி.பி.எம் பள்ளியை ஏற்படுத்தியதும், அதன்பின் ஆங்கிலவழியில் கற்க மேலும் ஒரு பள்ளியையும் கட்டி அதற்கு சகோதரி நாய்ஸ் பெயரை வைத்ததுமான நினைவுகள் நிறைவை அளித்தன.

ரயிலில் கூட்டம், கூட்டமாக வேலைக்குச் செல்பவர்கள் ஏறத் தொடங்கினர். அவர்களைப் பார்த்தபோது வேலை பார்க்கும் இடத்திற்கே ரயிலில் தொழிலாளர்களை அழைத்து வந்த மதுரை ஹார்விமில் நினைவு எழுந்தது. அக்காலத்தில் ஹார்வி மில் மதுரையில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. பணியாளர்கள் வசிக்க திருப்பரங்குன்றம் அருகே ஹார்விப்



பட்டி உருவாகி அவர்கள் வந்து போக வசதியாக ரயிலும் ஓடியது. அங்குதான் கல்லூரிகட்ட பெருநிதி அளித்த ஜேம்ஸ்டோக் ஹெலன் டோக் தம்பதிகளைச் சந்தித்து உரையாடுவார்.

ரயிலில் சன்னலோரம் வேடிக்கை பார்த்தபடி வந்த கேட்டி ஊர்தோறும் கம்பங்களில் பல வண்ணங்களில் கட்சிக் கொடிகள் பறப்பதைப் பார்த்தார். அந்தக் கொடிகளைப் போல அவர் நினைவும் 1948க்குப் பறந்தது. இந்தியாவின் முதலாவது சுதந்திர தினக் கொண்டாட்டமும், லேடிடோக் கல்லூரி தொடங்கி ஒரு மாத நிறைவும் ஒன்றாக வந்த காலமது. மாணவியர் பல்வேறுவிதமான கலைநிகழ்ச்சிகளை நிகழ்த்தினர். பாரதியின் ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே போன்ற பாடல்களைப் பாடி ஆடினர். அதைப்பார்த்துக் கொண்டிருந்த கேட்டி தமிழகத்திற்கு முதன்முதலாக பாரதியின் பிறந்த தினத்தன்று வந்தது, காந்தி மதுரையில் அரையாடைக்கு மாறியது அக்காலப் பள்ளி மாணவிகளிடம் உரையாடியது, கேப்ரன்ஹால் பள்ளிக்கு அருகிலுள்ள திலகர் திடலில் தலைவர்கள் உரைவீச்சு நிகழ்ந்தெல்லாம் ஞாபகம் வந்தன.

அவர் மாணவிகளிடம் உரையாற்றும் போது சுதந்திரம் என்பது எல்லோருக்கும் சமமாய் விளங்க வேண்டும். பெண்களுக்குக் கல்வி, சமத்துவமாய் அமைய வேண்டும் என்றார். எண்பது மாணவிகளும் அவர்களுக்கு




முன்னுதாரணமாக விளங்கும் கேட்டியின் உரைக்கு எழுந்து நின்று கரவொலியெழுப்பினர். அவர் நினைவைக் கலைக்கும் விதமாக ரயிலைப் பார்த்து கையசைத்து பள்ளிச் சிறுவர்கள் ஆரவாரம் செய்ததைப் பார்த்தார். காமராசர் முதல்வரான பிறகு ஏராளமானோர் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லத் துவங்கிய காலம்.

மேற்கே சூரியன் ஆரஞ்சுப் பழம் போலக் கனிந்து நின்றது அவர் நினைவுகளைப் போல. லேடிடோக் கல்லூரியின் காலேஜ் ஹால் மேல்தளத்தில் நின்றபடி மாலை வேளைகளில் தொலைவில் மலைகளினூடாக மறையும் சூரியனை, கதீட்ரல் தேவாலயத்தின் சிலுவையை, சொக்கிகுளம் கண்மாயில் கூடடைய வரும் பட்சிகளின் அரவத்தை, குவிமாடங்களுடன் கோட்டை போன்ற ஓ.சி.பி.எம் பள்ளியின் மேல்தளத்தைப் பார்த்து ரசிப்பார். “பொன்னைவிட ஞானத்தைப் பெறுவதே மேல்; வெள்ளியைவிட உணர்வைப் பெறுவதே மேல்” என்ற விவிலிய நீதியின் புதிய விளக்கமாய், தமது பொன்னையும் வெள்ளியையும் இல்லாதவர் ஞானமும் கல்வியும் பெற செலவழிப்பதே வாழ்க்கையின் பொருள் என்பதாக உணர்ந்தார்.

ரயில் சென்னைப் பட்டினத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு அங்குலத்திலும் உறைந்த தொன்மமும், உயிர்ப்பின் துடிப்புமாய் இருந்தாலும் பழுத்த நிதானத்துடன் இயங்கும் மதுரை, தமக்குள்ளும் ஏறிவிட்டதாகவே தோன்ற ஏக்க உணர்வும் எழுந்தது. மேற்கிலிருந்து வந்து கிழக்கில் சுடரேற்றி மீண்டும் மேற்குத் திசை ஏகிக் கொண்டிருந்தது செம்பரிதி.

[Miss Katie wilcox - An Inspiration (Biography of the Founder)
நூலில் உள்ள தகவல்களைத் தழுவி]

# மேகாட்டு மேய்ப்பன்

■ ஸ்ரீதர் பாரதி

ஒருகையில் தொரட்டிக்கம்பு
ஒருகையில் தூக்குவாளி விந்தி விந்தி
நடப்பார் வீரையா
விடிஞ்சது தொட்டு அடஞ்சது வரைக்கும் ஆடுகளைக்
கட்டியலையும் அன்றாடப் பொழப்பு
அவர் வயிறு நிறைவதை விடவும் ஆடுகள்
வயிறு நிறைவதுதான் அவருக்கு முக்கியம்
அறுபதைக் கடந்த பின்னும்
அசராமக் கொலை ஒடிப்பார்
அஞ்சாறு வருசம் முந்தி பொஞ்சாதி தவறிப்போக
வெசனத்துல உடைந்து போனார்
நோவு கண்ட ஆட்டுக்காக
நோன்பிருந்து நேர்ந்து கொள்வார்
ஏசப்பா மாதிரி எப்பொழுதும் குட்டி ஆட்டை
சுமந்து போவார்
அமட்டுவார் அடிக்கமாட்டார் ஆடுகள் மேல்
அப்படியொரு பேரன்பு
யார் கண்பட்டதோ
மேகாட்டு மேய்ப்பனுக்கு
கிழக்கிருந்து வந்தது கெட்டநேரம்
ரோட்டுக்குப் போன ஆடொன்றை காருகாரங்கிட்ட
காப்பாத்த காலெடுத்து ஓடுகையில் அளவைக்
கல்லில் தடுக்கி அங்கனயே
ஆவிவிட்டார் ஆடுகளைக் கதறவிட்டு






சிறுவர் இலக்கியம்

# புதிய தடத்தில் ரஷ்ய இலக்கியம்

■ ஏ.சண்முகானந்தம்

கடந்த 1970களில் தொடங்கி நாளது வரை தமிழ்ச் சூழலில் ரஷ்ய இலக்கியங்களின் பாதிப்பு தமிழ்ப் படைப்பாளிகளிடம் இருந்து வருகிறது. தாய், அன்னா கரீனைனா, தந்தையரும் தனயரும், கசாக்குகள், புத்துயிர்ப்பு, குற்றமும் தண்டனையும், போரும் அமைதியும், முதல் ஆசிரியர், ஜமீலா, வெண்ணிற இரவுகள் எனத் தமிழர்களை ஈர்த்த ரஷ்ய இலக்கியங்களின் வரிசை மிக நீண்டது. அந்த வரிசையில், நிக்கொலாய் ஒஸ்திரோவ்ஸ்கியின், 'வீரம் விளைந்தது' நாவல் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

ஜெர்மன் நாட்டுப் படையின் ஊடுருவல், உள்நாட்டு முதலாளிகளின் போர், ஜார் மன்னரின் வழித்தோன்றல்களின் தொடர்ந்த அச்சுறுத்தல்களுக்கு இடையில் செஞ் சேனையின் வீரம் செறிந்த போராட்டத்தையும், இந்நாவலின் நாயகன் பாவெல் கர்ச்சாகினின் தீரத்தையும் வெளிப்படுத்துவதாக இன்றளவும், 'வீரம் விளைந்தது' நாவல் நினைவுகூரப்படுகிறது. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நாவல் வெளிவந்திருந்தாலும், இன்றளவும் உலகெங்கிலுமுள்ள போராடும் மக்களுக்கும், இளைஞர்களுக்கும் நம்பிக்கையூட்டுவதாக இந்நாவலின் பேசுபொருள் அமைந்துள்ளது.

கடந்த 1917 ஆம் ஆண்டு லெனின் தலைமையில்

போல்ஷ்விக் கட்சியால் (ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி) வழி நடத்தப்பட்ட தொழிலாளர், உழவர் புரட்சி மாபெரும் வெற்றி பெற்றது. ஆட்சிப் பொறுப்பில் இருந்து வீழ்த்தப்பட்ட ஜார் மன்னரின் வழித்தோன்றல்கள், முதலாளிகள் புரட்சிக்கெதிராக ஆயுதமேந்திப் போராட ஆரம்பித்தனர். மறுபக்கம் செர்மனியின் படையும், புரட்சிக்கெதிரானவர்களின் உள்நாட்டு போரும் மூளத்தொடங்கின. இவற்றை எதிர்த்து ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி, தொழிலாளர்கள் இணைந்த செஞ்சேனை போராட ஆரம்பித்தது.

தனது சிறுவயதில் செஞ்சேனையில் இணைந்த பாவெல் பல போர்களில் ஈடுபட்டுக் காயமடைந்தாலும், சற்று உடல் நலம் தேறி மீண்டும் போர்க்களத்திற்குச் சென்றார். அவரது இடையறாத போர்க்களப் பணிகளால் உடல் நலம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு, முழுமையாக ஓய்வெடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. போர்க்களம் செல்ல முடியாத, உடல் நலம் குன்றிய நிலையில் இளைஞர் சங்கப் பணிகள், எழுத்துப் பணி எனப் பல்வேறு பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்.

போரில் பல முறை குண்டுகள் தாக்கியதன் பின்விளைவாக உடல் நலம் மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன், கை கால்கள் செயல் இழக்க ஆரம்பித்தன. பார்வையும் மோசமடைந்து, சிறிது காலத்தில் முழுமையாகப் பார்வை பறிபோனது. தனது இளம் வயதிலேயே போர்க்களங்களில் செயலாற்றி, நடக்க இயலாமல் படுகாயமடைந்தாலும், மக்களுக்கான பணிகளில் தன்னை எந்த வகையிலாவது ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன் பாவெல் செயல்பட்டு வந்தார். அவர் முன் இருந்த ஒரே வாய்ப்பு எழுத்து மட்டுமே. அதையும் அவர் சொல்லச் சொல்ல ஒருவர் எழுத வேண்டும் என்ற நிலையில், தன்னுடைய போராட்ட வாழ்வை அடிப்படையாகக் கொண்டு எழுத ஆரம்பித்த நாவல்தான், ‘வீரம் விளைந்தது’.

‘புரட்சி’, ‘மக்கள் எழுச்சி’ என்ற சொல்லாடல்களுக்கான முதன்மைப் பங்கு, இளைஞர்கள், தங்களது சமூகப் பங்களிப்பை எந்த வகையில் நல்கவேண்டும் என்பதை நாவல் எடுத்துரைத்தது. 1932ஆம் ஆண்டு ரஷ்ய மொழியில் ‘வீரம் விளைந்தது’ நாவல் வெளியானது. உடல் நலம் மோசமடைந்து 1936ஆம் ஆண்டு நிக்கொலாய் இறந்தாலும், அவரது நாவல் உலக அளவில் பல மொழிகளில்

மொழிபெயர்க்கப்பட்டு இளைஞர்களால், எளிய மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாவலின் கதாநாயகன் பாவெல்லும், தாய் நாவலின் பாவெல்லும் இன்றளவும் இளைஞர்களுக்கான முன்னுதாரணமாக உள்ளனர் என்றால் மிகையல்ல.

உலக அளவில் கொண்டாடப்பட்டு வரும் இந்நாவலின் இளையோர் பதிப்பை ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மறு ஆக்கம் செய்துள்ள ஆதி வள்ளியப்பன் மிகுந்த பாராட்டிற்குரியவர். வடிவமைப்பும், அழகிய ஓவியங்களும், எளிய தமிழாக்கமும், தரமும் பள்ளி மாணவர்கள், இளைஞர்கள் என அனைவரையும் வீரம் விளைந்தது நூல் கவர்ந்திழுக்கும் என்பதில் ஐயமில்லை.

ரூடால்ஃப் கார்க்லின் சிறுவர்களைக் கவர்ந்திழுக்கும் அழகிய ஓவியங்களுடன் தரமான முறையில் புக்ஸ் பார் சில்ரன்ஸ் இந்நூலை வெளியிட்டுள்ளது. தொடர்ச்சியாக ரஷ்ய இலக்கியங்களின் நீண்ட வரிசையை இளையோர் பதிப்பாக வெளிக்கொண்டு வரும் முயற்சியில் புக்ஸ் பார் சில்ரன்ஸ் ஈடுபடும் என்ற நம்பிக்கையை இப்பதிப்பு தருகிறது.

'உலகெங்கும் சாதாரண, எளிய மக்களின் உரிமைகளுக்காப் போராட வேண்டிய, புரட்சி நடத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்திய முக்கிய படைப்பான வீரம் விளைந்தது, காலம் காலமாக உத்வேகம் அளித்து வரும் நாவல்களில் ஒன்று' எனக் குறிப்பிடும் ஆதி வள்ளியப்பனின் இம்முயற்சி பாராட்டிற்குரியது. அந்த வகையில், அடுத்தடுத்து ரஷ்ய இலக்கியங்களை இளையோர் பதிப்பாக வெளிக் கொண்டு வரவேண்டிய பணியை ஆதி வள்ளியப்பன் மேற்கொள்வார் என நம்பலாம். இளையோருக்கான நூல் வரிசையில் கொண்டாடப்பட வேண்டிய படைப்பாக மட்டுமின்றி பாதுகாக்கப்பட வேண்டிய படைப்பாகவும் 'வீரம் விளைந்தது' நாவல் உள்ளது.

வெளியீடு

**வீரம் விளைந்தது**
புக்ஸ் பார் சில்ரன்ஸ்
நிக்கொலாய் ஒஸ்திரோவ்ஸ்கி
(ஆங்கில மொழிபெயர்ப்பு; ஷீனா வேக்ஃபீல்ட்)
தமிழில் மறுஆக்கம்: ஆதி வள்ளியப்பன்
ஓவியங்கள்: ரூடால்ஃப் கார்க்லின்
விலை ரூ.50.00



## கார(ண)ம்

அழுது அடம்பிடித்து
ஆர்ப்பாட்டம் செய்து
பள்ளிப் பேருந்தில்
திணிக்கப்படும் பிள்ளைகள்
கற்றுக் கொள்கிறார்கள்
சன்னலின் வழி
திண்பண்டங்களுக்கான
விளம்பரங்களை....

குர்குரேவில்
இன்னும் வழிந்துகொண்டிருக்கிறது
கிருத்திக் குட்டி
தியா குட்டியின்
கண்ணீர்த் துளிகள்...

மு.பன்னீர்.. குரால்.



நம்பிக்கையின் ஒளிக்கீற்று

# குழந்தைகளுக்கான கலை இலக்கிய கொண்டாட்டம்

## இனியன் உடனான நேர்காணல்

■ ஜெயக்குமார்

குழந்தைகள் சார்ந்து இயங்குபவர்கள் மத்தியில் இனியன் மிகவும் பரிச்சயமானவர். "பல்லாங்குழி" என்கிற அமைப்பை நிறுவி, தமிழ் மரபு விளையாட்டுகளைப் பட்டி தொட்டி எங்கும் கொண்டு சேர்ப்பவர். சிறுவர்களால் "மொட்டை மாமா" என்று செல்லமாக அழைப்படுபவர். அவர் ஒரு நாடோடி, இலக்கிய விரும்பி, தமிழ்ச் சிறுவர் இலக்கிய ஆர்வலரும் கூட. தமிழ்ச் சமூகத்தில் அவர் கண்டறிந்த சமகாலச் சிறார் நூல்களைத் தமிழ் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தும் ஒரு முயற்சியாக "குழந்தைகளுக்கான கலை இலக்கியக் கொண்டாட்டம்" நிகழ்வை முன்னெடுத்து 2 நகரங்களில் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். அந்த நிகழ்வைப் பற்றிய நேர்காணல்.

**எப்படித் தோன்றியது இந்த எண்ணம்? இதற்கான அவசியம் என்ன என்று நினைக்கிறீர்கள்?**

எப்படித் தோன்றியது என்றால், இலக்கிய விழாக்கள் புத்தக வெளியீட்டு விழாக்கள் என்று போகும் போதெல்லாம், அங்கே கொண்டாடப்படுகின்ற அல்லது பேசப்படுகின்ற புத்தகங்கள் மற்றும் பேசுபொருட்கள் போன்றவற்றைக் கவனித்தால் அதில் குழந்தைகள் சார்ந்த அல்லது

குழந்தைகள் இலக்கியம் சார்ந்த எந்தவொரு பேசு பொருட்களும் துளிக்கூட இல்லை என்பதை உணரமுடிந்தது. அதேநேரம் இலக்கிய வட்டத்திற்குள் தொடர் புறக்கணிப்பில் இருப்பதும் குழந்தைகள் இலக்கியம்தான் என்பதையும் உணரமுடிந்தது. தேர்ந்த புத்தக வாசிப்பாளர்களில் பலரும் குழந்தைகள் இலக்கியம் சார்ந்த புத்தகங்களை வாசிப்பதோ அது தொடர்பாக உரையாடுவதோ இல்லை என்பதையும் பல உரையாடல்களின் மூலம் உணர முடிந்த அதேவேளையில் பெரும்பான்மையானவர்களிடம் குழந்தைகள் இலக்கியம் சார்ந்த புத்தகங்கள் தமிழில் இல்லை என்கிற குற்றச்சாட்டையும் குழந்தைகள் வாசிப்பதில்லை, வாசிப்பு அற்ற பெருஞ் சமூகம் போன்ற சொற்களையும் பெற முடிந்தது.

நிலை அதுதானா என்றால், ஆம். அதில் ஓரளவு உண்மையும் இருக்கவே செய்கிறது. ஆனால் 90களின் மத்தியக் காலத்திற்குப் பிறகு குழந்தைகள் இலக்கியத்தில் ஏற்பட்ட தேக்க நிலை தற்போது உடைபடத் துவங்கிப் புத்துணர்வு பெற்று வருகிறது. இந்தப் புத்துணர்வை தக்க வைத்துக் கொள்வதற்கான களமாக ஒருங்கிணைந்த இலக்கியச் சூழல் இங்கே இருக்கிறதா எனக் கேள்வி கேட்டால் இல்லை என்பதுதான் பதிலாகக் கிடைத்தது. அப்போது அந்த ஒன்றிணைப்பு எதன் மூலம் சாத்தியமென்றால் வெளியீட்டு விழாக்கள், அறிமுகம் மற்றும் விமர்சனக் கூட்டங்கள் போன்றவற்றைத் தொடர்ந்து குழந்தைகள் இலக்கியத்திற்காக முன்னெடுக்க வேண்டிய தேவையும் இருக்கிறது என்பதையும் உணர முடிந்தது. அந்த உணர்ச்சிகளை விளையாட்டாய் நண்பர்களிடம் பகிர்ந்துகொண்டபோது நாமே செய்யலாமே என ஊக்கம் கொடுத்தனர். அந்த ஊக்கத்தில் இருந்து உருவானதுதான் “குழந்தைகளுக்கான கலை இலக்கியக் கொண்டாட்டம்” நிகழ்வு.

இதிலும் கூட வெறுமனே புத்தக அறிமுக விழாக்கள் போல் அல்லாமல் குழந்தைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் என அனைவரும் ஒன்றிணையும் புள்ளியாக இருக்க வேண்டும் என அதற்கான வடிவமாக நிகழ்வை வடிவமைக்க முயற்சித்தோம். அவசியம் ஏன்? ஏனென்றால் உலகில் குழந்தைகளுடன் தொடர்பில்லா மனிதர்கள் என யாருமில்லை. ஆனால் தொடர்பை அறுத்துக் கொண்டவர்கள் ஏராளம். அப்படித் தொடர்பு இருப்பதாக நம்புகிற மனிதர்களைக் குழந்தைகளோடும் கலைகளோடும் ஒன்றிணைக்கும்போது குழந்தைகள் பற்றிய

முன்முடிவுகளைச் சிறிதுசிறிதாக நமது இந்தப் பொதுச் சமூகத்தில் நீக்கி விட முடியும் என்ற நம்பிக்கையைக் கொடுத்திருப்பதைதான் அவசியமாகக் கருதுகிறேன். மேலும் வாசிப்பற்ற சமூகம் என்ற தேக்கநிலையை முற்றிலும் நீக்கி விட முடியாது என்றாலும், ஏதோ ஓரளவு வாசிப்பு பற்றிய அனுபவங்களைக் குழந்தைகளிடம் கொண்டு சேர்க்கவும் அவசியமாய் இருகிறது.

**பள்ளிகள் இதைப் போன்று செய்யவில்லை என்று நினைக்கிறீர்களா?**
அப்படி ஒருபோதும் நான் நினைத்ததில்லை. பள்ளிகளில் ஒருசில ஆசிரியர்களின் முயற்சிகளால் ஆங்காங்கே சில பள்ளிகளில் நடை பெறுபெறுகின்றன. ஆனால் அங்கே ஏதோவொரு கட்டாயத்தன்மை குழந்தைகள் மத்தியில் இருப்பதை உணர முடிகிறது. அதற்குக் காரணம் இந்தக் கல்வியியல் அமைப்புதான் எனவும் நினைக்கிறன்.

**பள்ளிகளில் நடத்தப்படும் விழாக்களுக்கும் இந்தக் கொண்டாட்டத்திற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?**
அந்த அமைப்பிற்குள் இருந்து கொண்டு செயல்படும் ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இருப்பினும் அங்கே தன் பள்ளிக் குழந்தைகள், தன் வகுப்புக் குழந்தைகள், போன்ற பிரிவினைவாதமும் அவர்களறியாமல் அவர்களுக்குள் இயல்பாய் திணிக்கப்படுகிறது. அது தடுக்க முடியாததும் கூடத்தான். ஆனால் வெளியில் குழந்தைகளை ஒருங்கிணைக்கிற போது அதுபோன்ற சிக்கல்கள் இல்லை.

**அந்த வித்தியாசத்தைக் குழந்தைகள் எவ்வாறு உணருகிறார்கள்?**
ஒருவித சுதந்திரத்தை உணர்கிறார்கள். பல தரப்பிலான அறிமுகத்தைப் பெறுகிறார்கள். தங்களுக்குள்ளான அறிமுகங்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். வகுப்பறை என்னும் நான்கு சுவர்கள் அற்ற நிலையில் சக நண்பர்களைக் கொண்டாடுகிறார்கள். தாங்களும் அதனை நோக்கி பயணிக்க வேண்டும் என விரும்புகிறார்கள். வகுப்பறையில் இருக்கிற பாகுபாட்டை இதில் அவர்கள் உணர்வதில்லை.

**எவ்வாறு குழந்தைகளைத் தேர்வு செய்கிறீர்கள்?**
குழந்தைகளை நாம் தேர்வு செய்வதில்லை. மாறாகக் குழந்தைகள்தான் புத்தகங்களைத் தேர்வு செய்கிறார்கள். தாமாக முன் வந்து புத்தகத் தேர்வு மற்றும் வாசிப்பை நோக்கிச் செல்லும் குழந்தைகளுக்கான மேடைகளைத்தான்



நாம் உருவாக்குகிறோம்.

குழந்தைகளினுடைய ஒத்துழைப்பும், பங்களிப்பும் எந்த அளவு உள்ளன? பெற்றோர்கள், ஆசிரியர்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் எப்படி உள்ளது?

குழந்தைகள் எப்போதும் ஆர்வம் மிக்கவர்கள். எதையொன்றையும் புதிதாக முயற்சிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள். அவர்களுக்குத் தேவையான அவர்கள் உணரக் கூடிய சுதந்திரத்தை நாம் உருவாக்கிக் கொடுத்தாலே போதுமானது அவர்களிடம் நாம் ஒத்துழைப்பை எதிபார்க்காமலே நமக்கான ஒத்துழைப்பைத் தரத் தயாராவார்கள்.

பல பெற்றோர்களுக்கு இது புதுவிதமான நிகழ்வாகவே தெரிவதால் ஓரளவு புரிய வைக்க முடிகிறது. ஆசிரியர்கள் இவற்றின் தேவையை நன்றாகவே உணர்ந்துள்ளனர் என்பதால் குழந்தைகளை வாசிப்பிற்குள் கொண்டு வருவதற்கான முழு ஒத்துழைப்பையும் பயிற்சிகளிலும் தாமாக ஈடுபடுகின்றனர். அதிலும் சில ஆசிரியர்கள் மட்டுமே.

**குழந்தை இலக்கியத்தில் பல வகையான புத்தகங்கள் கிடைக்கப் பெறுகின்றன, நீங்கள் எந்த வகையான புத்தகங்களைத் தேர்வு செய்கிறீர்கள்? எப்படித் தேர்வு செய்கிறீர்கள்?**

தேர்வு செய்வது என்பது மிகக் கடினமான வேலையாகத்தான் இருக்கிறது. அதில் கூடுமான அளவிற்கு அதீத கற்பனைகளைக் கொண்ட புத்தகங்களையும், சிரமமமான மொழி பெயர்ப்பு புத்தகங்களையும் தவிர்த்து விட்டு ஓரளவு கற்பனையுடன் கூடிய எதார்த்தங்களைச் சொல்லக் கூடிய இலகுவான நேரடித் தமிழ் புத்தகங்களையே தேர்வு செய்கிறோம். மேலும் நேரடி நீதிக் கதைகள் போன்றவற்றை முற்றிலுமாக தவிர்த்து வருகிறோம். ஆனால் பரிசளிக்கும் போது அனைத்து வகையான புத்தகங்களையும் பரிசளிக்கிறோம். எதிர்வரும் காலங்களில் வயது வாரியாக, கற்பனை கதைகள், அறிவியல் கதைகள், கணிதக் கதைகள், சமூகநீதிக் கதைகள், எதார்த்தக் கதைகள், பகுத்தறிவுக் கதைகள் எனப் பிரிவுகளாக வரும் பட்சத்தில் அதற்கேற்றாற்போல் நிகழ்வுகளை மாற்றியமைக்கவும்

திட்டங்கள் இருக்கிறது.

**தற்போது சென்னையிலும், கோத்தகிரியிலும் நிகழ்வுகளை முடித்தாயிற்று. இந்த இரு நிகழ்வுகளில் இருந்து நீங்கள் கற்றது என்ன பெற்றது என்ன?**



இரு நிகழ்வுகளுமே வெவ்வேறு நிலப்பரப்புக்கான நிகழ்வுகள். கற்றது பெற்றது எனப் பிரித்துச் சொல்லக் கூடிய அளவிற்கு எதுவும் இருக்கிறதா என்று சொல்லத் தெரியவில்லை. ஆனால் வெவ்வேறுவிதமான அனுபவங்கள் கிடைத்திருக்கின்றன என்று வேண்டுமானால் சொல்லலாம். அதேநேரம் தொடர்ந்து செயல்படுவதற்கான உத்வேகமும் கிடைத்திருக்கிறது. வருடத்திற்கு 2 என்கிற விகிதாசாரத்தை குறைந்தது 4 என்ற முறையில் மாற்றிட வேண்டும் என்ற முனைப்பு உருவாகியிருக்கிறது. கூடுதல் கவனமும் கூடுதல் உழைப்பும் தேவை என்பதை மட்டுமே இரு நிகழ்வுகளின் மூலம் கற்றதும் பெற்றதாகச் சொல்ல முடியும். நிறைய சிந்திக்க வைத்துள்ளன இரு நிகழ்வுகளும். சிந்தித்தவற்றை எல்லாம் செயல்படுத்துவது பற்றிக் காலம் மட்டுமே பதில் சொல்லிட முடியும்.

**எந்த இலக்கை நோக்கிய பயணம் இது? இதற்கான அடுத்தகட்ட நகர்வு எப்படி இருக்கப்போகிறது?**

இலக்கு என்றால் பரந்துபட்ட வாசிப்பு அறிமுகங்கள். அதிலும் குறிப்பாக அடித்தட்டுப் பகுதி குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரிடம். நகர்வு என்றால் நிகழ்வோடு நிறுத்தி விடாமல் அவர்களை அடுத்தடுத்த வாசிப்புத் தளத்திற்கு கொண்டு சேர்த்திட சில கூட்டு முயற்சிகள் செய்ய வேண்டியதாகத்தான் இருக்கும். அதேபோல் பல்வேறுபட்ட நில அமைப்பு குழந்தைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் என அனைவருக்குமான ஒரு தொடர்பை ஏற்படுத்தி அதிலிருந்து ஒருங்கிணைந்தப் படைப்புகள் அதிகரித்தல் மற்றும் சமத்துவச் சமூகம் சார் செயல்பாடுகள் எனப் பயணிக்க வேண்டும். முயற்சிப்போம்.

●



## ஏழைத் தாயின் மகன்

*துளிர்*

ஏழைத்தாயின் மகனாக
நீங்கள்
ஒரு ரயிலையாவது
கொளுத்தியிருக்க
வேண்டும்

கருப்பை சுமந்த
சிசுவை
பாத ரேகைகளால்
நசுக்கியிருக்க வேண்டும்

அதை கண்டுகொள்ளாமல்
காரின் பின்சக்கரத்தில்
சிக்கிய நாயென
கடந்திருக்க வேண்டும்

பச்சப் புள்ளைக்கும்
பாதுகாப்பற்ற
தேசமென்றபின்
மார்பினளவு
ஐம்பத்தாறு இஞ்ச் என
பீத்திக் கொள்ள வேண்டும்

எலிகளை
கவ்விய விவசாயிகள்
அம்மணமாக
வாசலில் நிற்கும்போது
செல்ஃபிக்கு
சிரித்திருக்க வேண்டும்

செல்லாதென்ற
ஓர் இரவில்
பசியோடு
க்யூவிலிருந்து
விழுந்து செத்த
கிழவனைத் தாண்டி
கீழ்திசை நாடுகளுக்கு
பறந்திருக்க வேண்டும்

இவையெதுவுமில்லையென்றாலும்
குறைந்தபட்சம்

சம்பந்தமில்லாமல்
பேசவும்.. அழுகவுமாவது..
தெரிந்திருக்க வேண்டும்
நீங்கள்

ஏழைத்தாயின் மகனாக...




# தமிழர் ஆறும் - நீரும்

■தமிழ்தாசன்

உலக அளவில் இயற்கை வளங்கள் அனைத்தும் தனிப்பெரும் முதலாளிய வர்க்கத்தின் லாப வெறிக்காகச் சூறையாடப்பட்டு, அந்நாட்டு மக்களின் வாழ்வாதாரங்கள் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கின்றன. இயற்கை வளங்கள் மீதும் பன்னெடுங்காலமாக உழைக்கும் மக்கள் கொண்டிருந்த பன்மயப்பட்ட பண்பாட்டு உற்பத்தி உறவை வளர்ச்சி என்ற வசியச் சொல்லலால் அறுத்தெறிந்து, பணமிருப்பவருக்கே வாழும் உரிமை என்ற ஒற்றைப் பண்பாட்டை உலகம் முழுக்க உருவாக்கி லாபவெறியில் கொழிக்கிறது ஏகபோக முதலாளிய வர்க்கம்.

வளர்ச்சி என்பது எந்த வர்க்கத்திற்கானது? வளர்ச்சி என்ற பெயரில் தமிழக சூழலில் நாம் சந்தித்த பேரிழப்புகள் என்ன? இயற்கை வளங்களின் மூல ஆதாரமான நீர் மீது தமிழர்கள் கொண்டிருந்த பன்மயப்பட்ட பண்பாட்டு உற்பத்தி உறவுகள் என்ன? மூலதன குவியலுக்கான போட்டியில் தமிழகப் பூர்வக்குடிகளின் நீராதாரங்கள் மீதும் நீராதாரங்கள் மேல் உரிமை பாராட்டும் எளிய மக்கள் மீதும் முதலாளிய நலன் பேணும் அரசுகள் நிகழ்த்திய வன்முறை என்ன என்பதை அணுகுவதுதான் இத்தொடரின் நோக்கமாக இருக்க முடியும்.

சூழலியல் சிக்கல் என்பது ஏதோ தனித்த ஒரு சிக்கலோ, அதற்கென்று தனித்த தீர்வோ ஏதுமில்லை. அரசியல், பொருளாதாரம், சமூக நிலை, கல்வி, பாலினம், சூழலியல் என அனைத்தின் மீதும் தீர்க்கமான தத்துவார்த்தக்

கொள்கைகளைக் கொண்ட உழைக்கும் மக்களுக்கான இறையாண்மை கொண்ட சனநாயகக் குடியரசை அமைப்பதே இங்கு நிலவுகிற எல்லாவிதச் சிக்கல்களுக்கும் தீர்வு காணுகிற முதல்படியாக இருக்க முடியும்.

**ஆறும் பேரும்:**

ஆறு என்பது இயற்கையாகச் செல்லும் நன்னீரைக் கொண்ட ஒரு பெரிய நீரோட்டம் ஆகும். ஆறுகள் பொதுவாக மலைப் பகுதிகளில் தொடங்குகின்றன. உற்பத்தியாகிச் சிறு தொலைவிலேயே ஆவியாகி அல்லது வறண்டு போகும் ஆறு சிற்றாறு. மழைக் காலத்தில் திடீரென ஒருசில நாட்கள் மட்டும் ஓடும் ஆறு காட்டாறு ஆகும். ஆற்றில் நீரோட்டமானது புவியீர்ப்பு விசையின் காரணமாக ஏற்படுகிறது. சில வேளைகளில் ஆறுகள் இன்னொரு நீர்நிலையை அடையும் முன்பே நிலத்துக்குள் உறிஞ் சப்படுவதோ அல்லது வறண்டு விடுவதோ உண்டு. பெரிய நீரோட்டங்கள் ஆறுகள் என்றும் சிறியவை சிற்றாறுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. எனினும் எதனை ஆறு என்று அழைக்கலாம் என்பதற்கான பொது விதி எதுவும் கிடையாது. மலைக்காடுகளில் இருந்தோ ஊற்றுக்களில் இருந்தோ ஏரிகளில் இருந்தோ மலைப் பனிக்கட்டிகள் உருகுவதன் மூலமோ மழை நீர் வழிந்தோடுவதனாலோ வேறு பல வழிகளிலோ ஆறுகள் உருவாகக் கூடும்.

மலைக்காடுகளில் இருந்தோ பனிமலை உருகுவதாலோ தனக்கென ஒரு உற்பத்தியிடம் அல்லது பிறப்பிடத்தைக் கொண்ட ஒரு ஆறு கடலில் சென்று கலக்கிறது. அவ்வாறு தானாகத் தோன்றும் ஒரு ஆறு மற்றொரு ஆற்றுடன் கலந்தால் அதைத் துணையாறு (Tributary) என்பர்.

நிலஅமைப்புக்கு ஏற்றவாறு ஒரு ஆற்றிலிருந்து தனியாக அல்லது கிளையாகப் பிரிந்து பயணிக்கும் ஆற்றை கிளையாறு (Distributary) என்பர்.

ஆண்டு முழுவதும் நீரோடும் ஆற்றை வற்றாத ஆறு (perennial river) என்றும், சில காலங்கள் மட்டும் நீர் ஓடும் ஆற்றை பருவக் கால ஆறு (Non-perennial river) என்றும் கூறுவார்.

தமிழக மரபில் இயற்கையாக உற்பத்தியாகி ஓடும் நீரைப் பேரியாறு. சிற்றாறு, காட்டாறு, ஓடை, ஊற்று, என



வகைப்படுத்தி அழைப்பது வழக்கம்.

ஆறும் நதியும் ஒரே பொருளைத் தருபவையா? பிற்கால இலக்கிய நூல்களில் நதியென்ற சொல் ஆளப்படுகிறது. நதியும் ஆறும் ஒரே பொருளைத் தருபவை என்ற கருத்துக்கு ஐயமூட்டும் விதமாக "நதியாறு கடந்து நடந்துடனே" (கலிங்கத்துப்பரணி 367) என்ற சொல்லாட்சியை ஜெயங்கொண்டார் கலிங்கத்துபரணியில் பயன்படுத்துகிறார். 'நிலத்தை நீரால் அறுத்துக்கொண்டு ஓடுவதால் அப்பெயர் பெற்றது. நிலத்தைப் பிரிக்குமளவுக்கு ஓடுகின்ற நீர்ப்பாய்வுகள் அனைத்துமே ஆறுகள்தாம். ஆறு நிலத்தை அறுத்து நிற்றலால் அதைக் கடக்க நீங்கள் பரிசல், படகு, ஓடம் போன்றவற்றை நாடவேண்டும்.

இறங்கிக் கடக்குமளவுக்கு ஓடும் நீர்வழி ஆறு ஆகாது. அவை ஓடைகள்.

நதி என்பது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பாய்கின்ற ஆறுகளை மட்டுமே குறிக்கும். நம் புவியியற்படி மேற்குத் தொடர்மலையில் தோன்றும் ஆறுகள் பலவும் கிழக்கே வங்கக்கடல் நோக்கிப் பாய்கின்றன. அவ்வாறுகள்தாம் நதிகள் என்று வழங்கப்படும்.

கிழக்கில் தோன்றி மேற்கு நோக்கிப் பாயும் ஆறு 'நதம்' எனப்படும். ஆனால், வழக்கில் ஆற்றுக்கு மாற்றுச்சொல்லாக எல்லாவற்றையும் நதி என்றே வழங்குகிறோம்' எனக் கவிஞர் மகுடேஸ்வரன் கூறுகிறார்.

கன்னியாகுமரி கோதை ஆறு முதல் சென்னை ஆரணி ஆறு

வரை தமிழகத்தில் சிறிதும் பெரிதுமாக 33 ஆற்றுப்படுகைகள் உள்ளன எனப் பொதுப்பணித்துறைப் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. சர்வதேச விதியின்படி 80 கி.மீக்கு அதிகமான நீளமுடைய ஆற்றைத் தான் ஆறு என்று கணக்கிடுவார்கள். கால்வாய் மற்றும் வாய்க்கால் மனிதனால் கட்டப்பட்டது அல்லது வெட்டப்பட்டது.

ஆறுகளுக்குப் பெயரிட்ட பன்டைய மக்கள் ஆற்று நீரின் தன்மை, அது உற்பத்தியாகுமிடம், நிலம், அது கலக்குமிடம், அது செல்லும் ஊர் பெயர்கள் ஆகியவற்றைக் கொண்டு பெயரிட்டுள்ளனர். சில ஆறுகளுக்குப் பெண்பால் பெயரைச் சூட்டியுள்ளனர்.

குடகு நாட்டு மலை சங்ககாலத்தில் ”பொன்படு நெடுவரை” என்று போற்றப்பட்டது (ஆவூர் மூலங்கிழார் புறநானூறு 166). பொன் போலத் தோன்றும் மலை என்பது பொருள். பொன்படு நெடுவரையில் தோன்றிப் பாய்வதால் காவிரி ஆற்றிற்குப் பொன்னியாறு என்றும் பெயரிட்டனர்.

பால் போன்ற வெண்ணிறமுடைய நீரோடுவதால் பாலாறு என்று பெயரிட்டுள்ளனர்.

நொய்யல் என்கிற ஊர் அருகே பொன்னியாற்றில் கலக்கும் ஆற்றை நொய்யல் என்று அழைக்கின்றனர்.

வேம்பாறு கடலில் கலக்குமிடத்து உள்ள ஊர் வேம்பாறு.

அடையாறு கடலில் கலக்குமிடத்தில் உள்ள ஊரின் பெயர் அடையாறு. இந்த ஊரில் பாய்வதால் ஆறு இப்பெயர் பெற்றதா அல்லது இந்த ஆறு பாய்வதால் இந்த ஊர் இப்பெயர் பெற்றதா என்பது ஆய்வுக்குரியதே.

ஒரே ஆற்றுக்கு அது பாயுமிடத்திற்கு ஏற்ப வெவ்வேறு பெயர்களைச் சூட்டும் வழக்கமும் உண்டு. ஒரே ஆற்றுக்குப் பல்வேறு பெயர்களைத் தமிழக மக்கள் வழங்கியிருக்கிறார்கள். மதுரை அழகர்மலையில் உற்பத்தியாகும் உப்பாறு வெவ்வேறு பெயர்களால் அது செல்லும் ஊர்களின் பெயராலோ அல்லது வேறு பெயர்களாலோ அழைக்கப்படுகிறது. அதனைச் சிலம்பாத்தோடை, பதினெட்டாங்குடி ஓடை,



உப்பாறு என்று பல்வேறு பெயர்களால் அழைக்கின்றனர்.


அதே போல மதுரை திருமங்கலம் பகுதியில் பாயும் குண்டாறு, தெற்காறு , மலட்டாறு என்று செல்லுமிடம் பொறுத்து மக்களால் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. உப்பாறு, பொருநை / பொருந்தல், மணிமுத்தாறு, பாலாறு, குண்டாறு, மலையாறு, மஞ் சளாறு, வெள்ளாறு, சிற்றாறு என்ற பெயர்களைக் கொண்ட ஆறுகளைத் தமிழகத்தில் பல இடங்களில் பார்க்கலாம்.

திருநெல்வேலி மற்றும் மதுரையில் பாயும் இரு வேறு ஆறுகளுக்குக் குண்டாறு என ஒரே பெயரைச் சூட்டியுள்ளனர். அமராவதியையும் தாமிரபரணியையும் சங்க இலக்கியம் பொருநை என குறிப்பதையும் காண முடிகிறது.

ஒன்றை ஆக்கவோ அழிக்கவோ அல்லது வசப்படுத்தவோ எத்தனிக்கும்போது முதலில் அப்பொருளின் பெயரை மாற்றுவதில் இருந்து துவங்க வேண்டுமெனச் சொல்வார்கள். தமிழகத்தில் உள்ள பெரும்பாலான ஆறுகளின் தமிழ்ப் பெயர்கள் சமஸ்கிருதமயப்படுத்தபட்டுள்ளதை நாம் பரவலாகப் பார்க்க முடியும்.

காவிரி ஆறு உற்பத்தியாகும் குடகு நாட்டு மலை சங்ககாலத்தில் பொன்படு நெடுவரை என்று போற்றப்பட்டது (ஆவூர் மூலங்கிழார் புறநானூறு 166). பொன் போலத் தோன்றும் மலை என்பது பொருள். பொன்படு நெடுவரையில் தோன்றிப் பாய்வதால் காவிரியாற்றை பொன்னியாறு என்றும் கூறுவர். காவிரி என்ற சொல்லின் பொருள் ‘தோட்டங்களின் வழியாகப் பாய்ந்து வருவது’ என்பதாகும். இதன் வடமொழி வடிவம் காவேரி ஆகும்.

தற்போது தாமிரவருணி என்று அழைக்கப்பெறும் ஆற்றின் தமிழ்ப் பெயர் பொருநை என்பதாகும். இந்த ஆற்றை



வடமொழி மகாபாரதமும், வால்மீகி ராமாயணமும் தாமிரபரணி என்றே குறிக்கின்றன. காவிரியின் துணையாறான அமராவதி ஆற்றின் பண்டைய பெயர் ஆன்பொருனை என்பதாகும்.

கொடைக்கானல் மலைப்பகுதியைப் பழனி மலைத்தொடர் என்று அழைப்பர். அம்மலையில் உற்பத்தியாகும் ஆறு பழனியாறு. காலப்போக்கில் அது பன்னியாறு என்று மருவி, சமஸ்கிரப்படுத்தும் போது அதை வராகநதி என்று மாற்றி விட்டனர்.

மதுரை அழகர்மலையில் உற்பத்தியாகும் சிலம்பாறு நூபுர கங்கை என்று சமஸ்கிருதத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அசுவமா நதி, கமண்டல நதி, அர்ஜுனா நதி, வசிட்டா நதி, சண்முகா நதி, கொசஸ்தலை நதி என்று சமஸ்கிருதமயப்படுத்தப்பட்ட ஆறுகளின் பெயர்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

பல ஆறுகளின் பழைய தமிழ் வழக்குப் பெயர்களை மக்களே மறந்துவிட்டனர். ஆறுகளை மீட்டெடுப்பது என்பது இழந்த அதன் இயற்கைச் சூழலை மட்டுமல்ல. அதன் வரலாற்றையும்தான்.அடுத்த சந்திப்பில் சங்க இலக்கியம் காட்டும் ஆறுகள் குறித்துப் பேசுவோம்.



# பறந்து போக வேண்டும்

■ கவி இளவல் தமிழ்

எந்திரமோ தந்திரமோ எதுவுமில்லாமல்
சுயமாய் சுதந்திரமாய் எதிர்பாரா ஒருநொடியில்
பிஞ்சு விரல் பிடி நழுவிய பலூனைப் போல
மெல்ல மிதந்து காற்றிலேறி விசை கெட்டு
வாழ்ந்திருந்த கூடும் கிளையும் துறந்து
இலக்கெதுவுமில்லாமல் ஒரு இறகைப்போல
நீள் பரப்பையும் நீலப் பரவையையும் நிலைத்துக் கடந்து
கனம் கரைந்து கட்டவிழ்ந்து இலகுவாகி
காதலும் துரோகமும் வலியும் வாஞ்சையும்
உறவும் வீடும் பழியும் புகழும்
பெயரும் முகமும் எல்லாம் மறந்து
உற்ற பகையும் பெற்ற நட்பும்
ஒருபோல் திரண்டு ஒரு சிறு பொட்டில்
தூரம் விலகித் தேய்ந்து மறைய
எங்கோ எதற்கோ எப்படியோ மெதுவாய்
மிக மெதுவாய்ப் பறந்து போக வேண்டும்



திரைப்படக் கட்டுரை

# விடை பெறுதல்

■ உமா பார்வதி

**என் காலம்**
**தவழ்கிறது**
**தத்துகிறது**
**நடந்து செல்கிறது**
**தலைதெறிக்க ஓடுகிறது**
**தள்ளாடிச் சரிகிறது**
**திரும்பிப் பார்க்கிறது**
**தேங்கிக் கிடக்கிறது**
**இன்னும் என்னன்னவொ செய்கிறது**
**என் காலம்**

**உன் காலமோ**
**காலை மாலைகளற்ற**
**வாடாத பூவாகத் தன் தீராத இதழ்களில்**
**மலர்ந்துகொண்டேயிருக்கிறது**

*(எதிரெதிர் காலங்கள் - ஜெ.பிரான்சிஸ் கிருபா)*

*வெகு வெகு காலம் சந்திக்காத இரண்டு சகோதரிகள் மீண்டும் இணைகிறார்கள். விடுமுறைக்காக எனச் சொல்லி அழைத்த மூத்தவளின் அழைப்பை மறுக்க இயலாமல் அவளுடன் ஒரு பெரும் பயணம் எதற்காக என்றறிந்த பின் இளையவளின் மனநிலை என்னவாகிறது என்பதை இருண்மையுடன் காட்சிப்படுத்துகிறார் ஸ்வீடன் இயக்குனர் லிசா லாங்செத்.*

Euphoria - *இத்திரைப்படத்தின் கதையை இரண்டே வரியில் கூறிவிட முடியும். ஆனால் கதைக்குள் மறைந்துள்ள வாழ்வும் மரணமும் நிச்சலனமும் கதையை வேறாக்குகிறது. தங்கை இனெஸ் (அலிஷியா விகாண்டர்), நீண்ட பிரிவிற்குப்*

பிறகு எமிலியை (ஈவா க்ரீன்) சந்திக்க விரும்புகிறாள். இனெஸ் அமெரிக்காவில் வசிக்கிறாள். அவள் ஒரு பிரபல ஓவியர். தனது துறையில் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தவளுக்கு சொந்த ஊரும், சொந்த தாயும், சகோதரியும் கசந்தவர்களாகி ஆண்டுகள் பலவாகிவிட்ட நிலையில்தான் எதிர்பாராத எமிலியின் அழைப்பு. இனிஸின் ஓவியங்களை அண்மைக்காலமாக விமரிசகர்கள் கடுமையாக விமரிசித்து வருவதால் அவளுக்கு சற்று ஓய்வு தேவைப்பட்டது. அதனாலும் கூட எமிலியின் அழைப்பை ஏற்கிறாள். ஆனால் இனெஸை வரவழைக்க எமிலி பெரும் செலவு செய்ய வேண்டியிருந்தது.

இரவு உணவு உட்கொள்ளச் செல்கின்றன்றனர். எமிலி கேட்ட உணவையே அனெஸும் கேட்கிறாள். புன்னகையுடன் ஒரு மோதிரத்தை தன் கைப்பையிலிருந்து எடுத்த எமிலி அதனை ஆவலுடன் இனெஸிடம் காண்பித்து நினைவிருக்கிறதா எனக் கேட்க அவள் இல்லையென்கிறாள். அம்மாவுடையது என்று கூறி அவளிடம் தர இனெஸ் அது தனக்கு வேண்டாம் நீயே வைத்துக் கொள் என மறுக்கிறாள். ஒரு நொடி எமிலியின் முகம் வாடுகிறது. எமிலி அருந்திய மது அவளுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்த வாந்தி எடுக்கிறாள். அதன் பின் அவர்கள் உறங்கச் செல்கின்றனர்.

பழைய கதைகள் பேசியபடி இருவரும் ஒரு தூரப் பயணத்திற்கு ஆயத்தமாகி காரில் புறப்படுகின்றனர். கார் ஓரிடத்தில் நிற்க இருவரையும் வரவேற்க மரினா (சார்லெட் ராம்ப்ளிங்) என்பவள் தன் குழுவினருடன் வருகிறாள். நீ எமிலியாகத் தான் இருக்க வேண்டும், இவள் இனெஸா என்று கேட்க, ஆம் என்று கூறி கைகுலுக்குகின்றனர். இவர்கள் யார் என்று ஆச்சரியத்துடன் இனெஸ் பார்க்க, மரினா என்னுடைய வழிகாட்டி என்றபடி எமிலி, மரினாவின் கரம் பற்றி நடக்கத் தொடங்குகிறாள். பெரிய மாளிகையின் வாசலுக்கு வந்து சேர்ந்தனர். வரவேற்பரையில் இருந்தவரிடம் எமிலி முன்பதிவு விபரங்களைக் கூறுகிறாள்.

அப்போதுதான் இனெஸுக்கு தான் விடுமுறையைக் கழிக்க வரவில்லை இறந்து கொண்டிருக்கும் தன் அக்காவின் கடைசி ஆறு நாட்கள் அவளுடன் தங்கப் போகிறோம் என்ற உண்மைத் தெரிய வருகிறது. அந்த ஆடம்பர விடுதி நோயாளிகள், வயோதிகர்கள், வாழப் பிடிக்காதவர்கள் என

மரணத்தை விரும்புவோர்க்கு அடைக்கலமாக விளங்குகிறது. பெரும் பணத்தைப் பெற்றுக் கொண்டு, கவனித்துக் கொள்ள ஒரு காப்பாளருடன் அங்கு வந்து தங்கி, அவர்களின் கடைசி ஆறு நாட்கள் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றபடி வாழ வழி வகுக்கின்றது. பின்பு அவர்கள் அவர்களை கருணைக் கொலையும் செய்து கொள்ள உதவுகின்றது. இவற்றையெல்லாம் ஒப்புக் கொள்கிறீர்களா என்று விடுதி ஆள் கேட்க ஆம் என்று கூறி தன் அறைச் சாவியைப் பெற்றுக் கொள்கிறாள் எமிலி. இனெஸ் அவளைக் கோபமாக பின் தொடர்ந்து வந்து, ஏன் இப்படி செய்தாய், ஏன் என்னிடம் உன் நோய் பற்றிக் கூறவில்லை என்று கேட்க, அதற்கு எமிலி ஒரு வெற்றுப் புன்னகையுடன் எத்தனை முறை அழைத்தும் உன்னிடமிருந்து சரியான பதில் வருவதில்லை. உன்னிடம் பகிர்ந்து கொள்ள எனக்கும் ஆசை தான் ஆனால் என் அழைப்பை கூட ஏற்க மறுத்த உன்னிடம் என்ன சொல்வது என்று மூன்று வருடங்கள் தனியாக இந்தப் புற்றுநோயுடன் போராடுகிறேன் என்று கூறுகிறாள். முந்தைய இரவு மது அருந்திய ஒவ்வாமையில் அல்ல புற்றுநோயின் முற்றிய நிலையில் தான் அவள் வாந்தி எடுத்திருந்தாள் என்பதை அறிந்து உறைந்து போகிறாள் இனெஸ்.

எமிலியைப் பொருத்தவரை தன்னுடன் பேசவோ வாழவோ நீயிருந்ததில்லை என்னுடைய மரணத்துக்காகவேனும் சாட்சியாக இரு என்பதற்காகத் தான் இனெஸை அழைத்திருந்தாள் எமிலி. ஆனால் அவளுக்கு இவை எதுவும் பிடிக்கவில்லை. ஆனால் ஒரு பக்கம் தன்னுடைய கைவிடப்பட்ட அக்காவின் கடைசி விருப்பமாகவும் அது இருக்கவே மனம் ஒன்றாமல் இருந்தாள். அன்றிரவு இருவரும் பேசி சிரித்து அதன் பின் உறங்குகிறார்கள். அடுத்த நாள், தன் வாழ்க்கை குறிப்பை எமிலி வாசிக்கத் தொடங்குகிறாள். எல்லா குடும்பத்தைப் போல அவர்களுடையதும் ஒரு மகிழ்ச்சியான குடும்பம்தான். அவர்களுடைய அப்பா குடும்பத்தை விட்டு வெளியேறும் வரை எல்லாம் சரியாகத் தான் இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு எமிலி இனெஸ் இருவரின் வாழ்க்கையும் சிதறுண்டு போகிறது. காரணம் குழந்தைகளைக் காக்க வேண்டிய தாய்க்கு மன அழுத்தம் அதிகரிக்க அவளால் இவர்களை வளர்க்க முடியவில்லை. எமிலி இளம் வயதிலேயே வீட்டுப் பொறுப்பை ஏற்கும் கட்டாயத்தில் இருக்க, அவர்களின் போராட்டத்தில் பங்குபெறாமல் பதின் வயதிலேயே இனெஸ் வீட்டை விட்டு

வெளியேறுகிறாள். அதன் பின் அவர்களின் அம்மா தற்கொலை செய்து கொண்டாள் என்ற தகவல் தெரிந்தும் இனெஸ் திரும்ப வரவில்லை. கடிதம் பாதி வாசிக்கப்படும் போதே கடுங் கோபத்துடன் மூன்றாம் நபரின் முன் நம் குடும்ப விவகாரத்தை ஏன் எடுக்கிறாய் என எமிலியை திட்டியபடி அவ்விடத்தை விட்டு அகன்றாள் இனெஸ்.

அடுத்த நாள் உணவருந்தும் சமயத்தில் இருவரும் எதையோ பேசிக் கொண்டிருக்க திடீரென்று உணர்வு வயப்பட்ட நிலையில் எமிலி இனெஸிடம் நீ எப்போதும் எதிலிருந்தும் தப்பித்துப் போவதையே விரும்புகிறாய் என கூச்சலிடுகிறாள். என்னவென்று இனெஸ் உணரும் முன் அவளை வசைமொழிகிறாள் எமிலி. நம் அம்மா தற்கொலை செய்து இறந்த சமயத்தில் உன் வாழ்வின் மகிழ்ச்சியான தருணத்தை நீ அனுபவித்துக் கொண்டிருந்தாய். நான் தனியாக அவளை அடக்கம் செய்தேன். உனக்கு அந்த வலி ஒருபோதும் புரியாது என்று கூறியபடி ஆவேசமாக அங்கிருந்த உணவுப் பதார்த்தை அவள் மீது வீசியெறிகிறாள் எமிலி. எல்லாம் இருவரும் சண்டையிடுவதைப் பார்த்த மரினா அங்கு வந்து எமிலியிடம் ஆறுதல் வார்த்தைகள் கூறி அறைக்கு அழைத்துச் செல்கிறாள். பின் தொடர்ந்து வந்த இனெஸிடம் மேலும் கோபத்துடன் தன் ஆற்றாமையை கூறுகிறாள். இனெஸ் தொலைபேசி அழைப்புகளை எடுக்காத சமயத்தில் கூட அம்மா இனெஸை வெறுத்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்துள்ளாள் எமிலி. தங்களைத் திரும்பிக் கூட பாராத ஒரு சகோதிரியின் மீதான அதீத அன்பினால் இந்த நொடி வரை அவளுக்காக காத்திருந்திருக்கிறாள். இறுதியாக இந்த அர்த்தமற்ற வாழ்க்கையை முடித்து கொள்ளும் தருவா யில்தான் அவளை அழைத்திருக்கிறாள் எனச் சொல்லி அழ, அனெஸ் மனம் கரைகிறது. தன்னால் வேறெப்படியும் இருக்க முடியவில்லை என்று கூறி எமிலியிடம் மன்னிப்பு கோருகிறாள். இருவரும் இப்படி சண்டை இட்டுக் கொண்டிருக்காமல் அடுத்த நாள் ஓரிடத்துக்குச் சென்று அமைதியாக உட்கார்ந்து பேச முடிவெடுக்கின்றனர்.

நதிக்கரையோரம் உணவு எடுத்துச் சென்று பேசிக் கொண்டிருக்கும் போது மறுபடியும் சகோதரிக்குள் சர்ச்சை ஏற்படுகிறது. இந்த முறை கைகலப்பும் ஏற்பட, கட்டிப் புரண்டு சண்டையிடுகின்றனர். ஒரு கட்டத்தில் இனெஸ் எமிலியை தள்ளிவிட அவளுக்கு வெகுவாக மூச்சிரைக்கிறது. அப்படியே மயக்கமடைகிறாள். பதற்றமான

இனெஸ் உதவி வேண்டி கதறுகிறாள். மயக்கத்திலிருக்கும் அவளின் தலைகோதிய மரினா இன்று அவளது உயிருக்கு ஏதும் அபாயம் இல்லை எனக் கூற இனெஸ் விடுபட்ட உணர்வுக்கு வருகிறாள். அங்கு பெருஞ்சப்தத்துடன் ஒரு ஹெலிகாப்டர் வரவே அது டாரென் என்பவர் தனது இறுதி யாத்திரைக்குத் தயாராகிவிட்டதால் கடைசி விருப்பமாக ஒரு இசைக் கச்சேரியை அன்றிரவு நிகழ்த்த கலைஞர்களை வரவழைத்திருந்தார் என அறிகிறாள் இனெஸ். அந்த ஹெலிகாப்டர் மறுநாள் திரும்பும் என்பதை அறிந்த அவள் புறப்பட முடிவு செய்கிறாள். மயக்கம் தெளிந்த நடமாடத் தொடங்கிய எமிலியிடம் தனது முடிவைச் சொல்ல அவள் எனக்கு தெரியும் உன்னை இனி வற்புறுத்தப்போவதில்லை எனக் கூறிவிட தன் உடைகளை எடுத்து வைக்கிறாள். எமிலியை சமாதானப்படுத்திய மரினா அவளுடன் நடனமாடினாள். நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள் என எமிலி விசாரிக்க தன் கணவருடன் சில ஆண்டுகள் முன்பு அங்கு வந்த அவள் அவருடைய மரணத்திற்குப் பின் புறப்பட்டுச் செல்ல மனமின்றி இங்கே தங்கிவிட்டதாகக் கூறுகிறாள். வெளியுலகில் தனக்கு எதுவுமில்லை என்று கூறுகிறாள். எமிலிக்கு பெரும் ஆறுதலாகவும் இழந்த தாயன்பைத் தறுபவளாகவும் மரினா இருப்பதை உணர்கிறாள்.

மறுநாள் இனெஸ் புறப்படும் சமயத்தில் மரினா அவளிடம் ஒரு விஷயத்தைப் பார்த்துவிட்டு புறப்படும்படி சொல்ல, ஹெலிகாப்டர் காத்திருக்கிறது என்று இனெஸ் தயங்குகிறாள். அது காத்திருக்கும் என்று கூறிய மரினா அவளை ஓரிடத்திற்கு வேகமாக அழைத்துச் செல்கிறாள். ஒரு அறையை காட்ட அவள் அதற்குள் நுழைந்தவுடன் கதவடைக்கிறாள். இனெஸ் அதிர்ச்சியடைந்து கதவை தட்ட மரினா திறக்க மறுக்கிறாள். ஹெலிகாப்டர் கிளம்பும் சப்தம் கேட்டு இனெஸ் அழத் தொடங்குகிறாள். சிறிது நேரத்தில் அங்கிருந்து வெளியேறி ஓடத் தொடங்குகிறாள். அவளை மரினா பின் தொடர ஒரு கட்டத்தில் ஓட முடியாமல் திணறித் தவித்து உடைந்து அழத் தொடங்குகிறாள். அவளை மடியில் தாங்கிய மரினா அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள். வீட்டை விட்டு வெளியேறியதற்குக் காரணம் தன்னால் அந்த துயரத்தை தாயின் மன அழுத்தத்தை அந்த வயதில் தாங்க முடியவில்லை என கூறி என் அம்மாவை இழந்ததில் எனக்கும் அதிக வருத்தம் அவளை இனி எங்கு காண்பேன் என்று கதறி அழுகிறாள். அவளை தேற்றி விடுதிக்கு

அழைத்துச் செல்கிறாள் மரினா.

எமிலியிடம் சென்ற இனெஸ் அவள் தலையைக் கோதியபடி பழைய விஷயங்களை சிறுமிகளாக இருந்த போது அவர்கள் பகிர்ந்து கொண்ட அன்பின் தருணங்களை நினைவு கூர்கிறாள். தங்கையின் மனமாற்றத்தை உணர்ந்த எமிலியும் அவளுடன் பேசி களிக்கிறாள். இத்தனை காலம் அவள் காத்திருந்தது இந்த பரிவுக்காகத் தான் என்பதை உணர்த்துகிறாள். எமிலியின் வாழ்க்கையின் கடைசி தினத்தன்று அவளை நீராட்டி, புத்தாடையை அணிவித்து ஒரு அறைக்கு அழைத்துச் செல்கிறாள் இனெஸ். அங்கு அவளிடம் சம்மதம் கேட்டபின் ஒரு கோப்பை தரப்படுகிறது. நஞ்சு கலந்திருந்த அதனை அருந்திய பின் மீளா உறக்கம் என ஏற்கனவே அவள் அறிந்திருந்ததால் ஆயத்தமாகிறாள். எமிலியின் காலடியில் அமர்ந்து அவளுக்கு நீண்டதொரு முத்தம் தருகிறாள் இனெஸ். கோப்பையில் இருந்த திரவத்தை எமிலி அருந்திவிட்டு சிறிது நேரம் சலனமின்றி இருந்து பின் மெள்ள உறக்கத்தில் அமிழ்கிறாள்.

சத்தமில்லாமல் ஒரு மரணம் தன் கண் முன் அரங்கேறியதைக் கண்டு பதைத்து துடிக்கிறாள் இனெஸ். அங்கிருந்து வெளியேறி தடுமாறி நடந்து ஓரிடத்தில் விழுகிறாள். அவளை ஆறுதல்படுத்திய மரினா புறப்படும் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறாள். ஹெலிகாப்டரில் அவளுடன் இன்னொருவரும் பயணிக்கிறான். அவன் எமிலியின் நண்பன் ப்ரயன். கிளம்புகையில் மரினா எமிலி ஒப்படைக்கச் சொன்ன ஒரு கடித உறையைப் பிரிக்கிறாள். அதில் அவர்களுடைய அம்மாவின் மோதிரம் இருந்ததைப் பார்த்து மனம் நெகிழ்ந்து போகிறாள் இனெஸ். மெள்ள ஹெலிகாப்டர் உயரத்தில் பறக்கத் தொடங்க, இனெஸ் அயச்சியிலும் துயரிலும் ஆற்றாமையிலும் ஒருவித விடுதலையுணர்வுடனும் கண் மூடுகிறாள்.

எல்லா துயரையும் கரைத்துவிடக் கூடிய மரணம் ஒருவருக்கு விடுதலையாகவும் அவருடன் பயணிப்பவர்களுக்கு கடும் துயரமாகவே இருக்கும். தனது மரணத் தேதியினை அறிந்தவர்களின் மனத்துயர் என்பது வார்த்தைகளுக்குள் அடங்காது. ஆனால் அவர்கள் எஞ்சியிருக்கும் நாட்களை புத்தம் புதிதாக ஒரு குழந்தையின் மனநிலையுடன் அணுகுவது அவர்களை உயிர்ப்புடன் வைத்திருக்கிறது என்பதை இப்படத்தின் மூலம் அறியத் தருகிறார் லிசா. ●



# செல்போனில் பேசிக்கொண்டு வாகனம் இயக்கலாமா?

ராபர்ட்

கடந்த 26.04.2017 அன்று மாலை 5.45 மணி அளவில், கேரளா மாநிலம் கொச்சி பகுதியைச் சேர்ந்த சந்தோஷ் என்பவர் பொதுவெளியில் செல்போனில் பேசியபடி மோட்டார் வாகனம் இயக்கினார் என்பதற்காக அவர் மீது, கேரள காவல் சட்டத்தின் பிரிவு 118 (இ) மற்றும் மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988 ன் பிரிவு 184ன் கீழ் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கினை இரத்து செய்யக்கோரி சந்தோஷ், கேரள மாநில உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கினை விசாரித்த தனி நீதிபதி, கேரள காவல் சட்டத்தின் பிரிவு 118 (இ) இது போன்ற வழக்குகளில் பொருந்துமா என்பது தொடர்பாக விசாரித்திட வேண்டி இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வுக்கு முன்பாக அதனை அனுப்பினார்.

கடந்த 16.05.2018 அன்று, அந்த வழக்கில் இரு நீதிபதிகள் அடங்கிய ஆயம், “கேரள காவல் சட்டத்தில், செல்போனில் பேசியபடி மோட்டார் வாகனம் இயக்குதல் தடை செய்யப்படவில்லை. ஆகவே, அப்படி வாகனம் இயக்குதல் பொதுமக்களுக்கு அபாயம் விளைவிக்கும் செயல் என்று கருத முடியாது. அவ்வாறு வாகனம் இயக்குவது அபாயம் விளைவிக்கும் செயல் என்று நீதிமன்றம் விதிகளை இயற்றிட முடியாது. சட்டமன்றத்தின் வாயிலாக அது

ஒரு குற்றச் செயல் என கேரள காவல் சட்டத்தில் சட்ட திருத்தம் கொண்டுவர வேண்டும். அதன் பிறகுதான் அது தொடர்பாக வழக்கு பதிவு செய்ய முடியும்" என்று கூறி அந்த குற்ற வழக்கினை இரத்து செய்து தீர்ப்பிட்டது. மேலும், அதுபோன்று நிலுவையிலுள்ள வழக்குளை இரத்து செய்ய கோரி சம்பந்தப்பட்டவர்கள் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களை அணுகலாம் என்று கூறியது. இந்த தீர்ப்பின் வாயிலாக, சாலையில் செல்போனில் பேசியபடி மோட்டார் வாகனம் இயக்குதல் குற்றமல்ல என்ற கருத்து ஊடகங்களிலும், பொதுமக்களிடமும் பரவலாக சென்றடைந்தது.

மேற்கண்ட வழக்கு இரு குற்றப்பிரிவுகளின் பதிவு செய்யப்பட்டது. கேரள காவல் சட்டத்தின் பிரிவு 118 (இ), "பொதுமக்களுக்கு அபாயம் விளைவிக்கும் செயலை அல்லது பொதுமக்கள் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் செயலை தெரிந்தே செய்யும் எவரொருவரும் மூன்று ஆண்டுகள் வரை சிறை தண்டனை அல்லது ரூபாய் 10,000/- வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்" என்று கூறுகிறது. மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988 இன் பிரிவு 184 "மோட்டார் வாகனத்தை பொதுமக்களுக்கு அபாயம் தரக்கூடிய வகையில் இயக்கினால் முதல் முறை குற்றத்திற்கு ஆறு மாத சிறை தண்டனையும் ரூபாய் 1000/- அபராதமும், இரண்டாம் முறை அதே குற்றத்தை செய்தால், இரண்டு ஆண்டு சிறை தண்டனையும், ரூபாய்.2000/- அபராதமும் விதிக்கப்படும்" என்று கூறுகிறது.

இந்த இரு சட்ட பிரிவுகளிலும் செல்போன் என்ற வார்த்தை இல்லை. அந்த இரு சட்டங்களும் இயற்றப்படும் போது செல்போன் கண்டுபிடிக்கப்படவே இல்லை. இருப்பினும், செல்போனில் பேசியபடி வாகனம் இயக்கி அதன் காரணமாக சாலை விபத்துகள் அதிகரித்து வருவதன் காரணமாக, அது பொதுமக்களுக்கு அபாயம் விளைவிக்கத்தக்க ஒரு செயல் என்பது எளிதில் புலனாகும். ஆகவே, செல்போனில் பேசிக்கொண்டே வாகனம் இயக்கினால் மேற்கண்ட இரு சட்டபிரிவுகளும் பொருந்தும். ஆகவே, கேரளா மாநில அரசு விரைவாக அந்த தீர்ப்பில் மறு ஆய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும் அல்லது அந்த தீர்ப்பிற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில், மேலும், அதிகப்படியான சாலை விபத்துகளை கேரள மாநிலம் சந்திக்க அது ஏதுவாக அமையும்.

மேற்கண்ட தீர்ப்பிற்கு ஒரு மாதகாலம் முன்பாக, "மீண்டும்

*மீண்டும் செல்போனில் பேசியபடி மோட்டார் வாகனம் இயக்குபவர்களின் ஓட்டுனர் உரிமத்தை, மாநில அரசு இரத்து செய்திட வேண்டும் எனவும், வாகனம் இயக்கியவர்களிடம் அது தொடர்பாக விளக்கம் கேட்டு, இரத்து செய்வது தொடர்பான நடவடிக்கைகளை வட்டார போக்குவரத்து அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும்" எனவும் இராஜஸ்தான் மாநில உயர்நீதிமன்றத்தின் இரு நபர் அடங்கிய ஆயம் 27.04.2018 அன்று உத்தரவிட்டுள்ளது.*

*கவனக்குறைவாக, சட்ட விதிகளுக்குப் புறம்பாக, மது அருந்தியபடி, கட்டுபாடற்ற வேகம், தூக்க கலக்கத்துடன் மற்றும் செல்போனில் பேசியபடி மோட்டார் வாகனங்களை இயக்குவதாலும், தவறான பாதையில் செல்வது, பழுதடைந்த சாலைகளில் பயணிப்பதாலும் வாகன விபத்துகள் அதிகரித்த வகையில் உள்ளன. ஆகவே, "செல்போனில் பேசியபடி மோட்டார் வாகனம் இயக்குதல் உள்ளிட்ட மோட்டார் வாகனம் இயக்குதல் தொடர்பான ஐந்து குற்றங்களுக்கு மூன்று மாதங்கள் வரையிலும் ஓட்டுனர் உரிமத்தை தற்காலிகமாக இரத்து செய்யலாம்" என சாலை பாதுகாப்பு தொடர்பான உச்சநீதிமன்ற குழு, நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்கு பரிந்துரை செய்துள்ளது.*

*மனித உயிரை அபாயப்படுத்தும் விதமாக, பொதுவெளியில் அஜாக்கிரதையாகவோ கவனக்குறைவாகவோ வாகனம் இயக்குவது மூன்று மாதம் சிறை தண்டனையோ அல்லது ரூ.1000/- அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கத்தக்க குற்றம் என இந்திய தண்டனை சட்டம் பிரிவு 279 கூறுகிறது.*

*அதுபோல, மனித உயிரை அபாயப்படுத்தும் விதமாக, பொதுவெளியில் அஜாக்கிரதையாகவோ அல்லது கவனக்குறைவாகவோ வாகனம் இயக்கி எவருக்கும் காயம் ஏற்படுத்தினால் அது ஆறு மாதம் சிறை தண்டனையோ அல்லது ரூ.500/- அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கத்தக்க குற்றம் என பிரிவு 337ம், அவ்வாறு வாகனம் இயக்கி எவருக்கும் கொடுங்காயம் ஏற்படுத்தினால் அது இரண்டு சிறை தண்டனையோ அல்லது ரூ.1,000/- அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கத்தக்க குற்றம் என இந்திய தண்டனை சட்டம் பிரிவு 338ம் கூறுகிறது.*

*அஜாக்கிரதையாகவோ கவனக்குறைவாகவோ செயல்பட்டு, எவரையும் மரணம் விளைவிக்கும் நோக்கமல்லாத வகையில் உயிரிழப்பு செய்தால் அது இரண்டு வருட சிறை*

*தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கத்தக்க வகையிலான குற்றம் என இந்திய தண்டனை சட்டம் பிரிவு 304A வும் கூறுகிறது. மேற்கண்ட பிரிவு 304A வில் வாகனம் இயக்கி அதன் மூலமாக மரணம் விளைவித்தல் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் இன்றளவும் மோட்டார் வாகனம் மூலமான இறப்புகளுக்கு அந்த பிரிவின் கீழ்தான் வழக்குபதிவு செய்யப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி பார்த்தால், மேற்கண்ட கேரளா உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பானது ஏற்புடைய ஒன்றல்ல என்பது சாதரணமாக புலப்படும்.*

*இப்படியாக, 1860ம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய தண்டனை சட்டத்தின் மேற்கண்ட பிரிவுகளின் கீழ், செல்போன் பேசியபடி வாகனம் இயக்கும் நபர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்து சிறை தண்டனை வழங்கிட வாய்ப்புள்ளது. மோட்டார் வாகனம் இயக்கும்போது, செல்போன் உபயோகிக்கும் காரணத்தால் நாளொன்றுக்கு 26 பேர் வீதம் மரணமடைந்து வருவதாக நடுவண் போக்குவரத்துத் துறை அமைச்சகம் கடந்த 2017ல் அறிக்கை வெளியிட்டுள்ளது.*

*காதில் செல்போன் இணைப்பு வயர்களை மாட்டிக்கொண்டும், செல்போனில் பேசிக்கொண்டும், ஹெல்மெட்டுக்குள் செல்போன் பொறுத்தியபடியும், புளூடூத் வசதிகளுடைய நான்கு சக்கர வாகனங்களில் செல்போனில் பேசிய படியும் பெரியவர்வர்கள் வாகனம் இயக்கும் போது அவ்வாறு செய்வதால், எவ்விதமான குற்ற எண்ணமும், சங்கடமும் இல்லாமல் அவர்களைப் பார்த்து இளைஞர்/ இளைஞிகளும் அவ்விதமே பின்பற்றி வருகின்றனர்.*

*இவ்வாறான சாலை விபத்துகளுக்கு, வாகனம் இயக்கும்போது செல்போன் உபயோகிப்பது தொடர்பாக நடப்பில் இருக்கும் சட்டப் பிரிவுகளை அமலாக்குவது அல்லது புதிய விதிகளை கொண்டுவருவது மட்டுமே தீர்வாக இருக்க முடியாது. இன்று ஆறாம் விரலாய் மாறிப்போன செல்போன் மனித சமூகத்திற்கு தவிர்க்க முடியாத ஒரு சாதனமாக மாறிவிட்டது. ஆனால், சாலைகளில் செல்லும் போது அதனைக் கவனக்குறைவாக பயன்படுத்தி, நமது மற்றும் சாலையில் செல்லும் பிறரின் உயிர்களைப் பறிக்கும் ஒரு கருவியாக மாற்றாமல் இருப்பது செல்போன் பயன்படுத்தும் தனிநபர்களின் கைகளில்தான் உள்ளன.*

சூழலியல் அரசியல்

■ அருண் நெடுஞ்செழியன்


# யார் அந்த மனிதன்?

நமது சமகாலச் சமுதாய சீர்கேடுகளுக்கும், சூழலியல் சீர்கேடுகளுக்குமான காரண கர்த்தாவைச் சூழலியல்வாதிகள் ஒருவாறு கண்டுகொண்டுவிட்டார்கள். குறிப்பாக, காலநிலை மாற்றச் சிக்கல், காடழிப்பு போன்ற சூழலியல் சிக்கல்களுக்குச் சமூகமனிதன்தான் காரணம் என நமது சூழல்வாதிகள் (குறிப்பாக லிபரல்) முடிவுக்கு வந்தனர். சிவில் சமூக மனிதனின் சுயநலம், பேராசை, ஆடம்பர வாழ்க்கை, டாம்பீக நுகர்வு முறைதான் சிக்கலுக்கு வேர் என்றனர். எழுநூறு கோடி மக்கள் சமுதாயத்தில் மாய மானாக இயற்கைச் சமநிலையை அழித்துத்திரிகிற அந்த "மனிதனை" ஒருவரும் அடையாளம் காண இயலாததால், அந்த மாய மானை கற்பனையில் துரத்திச் செல்வதோடு தங்களது சூழலியல் கரிசனத்தைத் தீர்த்துக் கொள்கின்றனர்.

இறுதிவரை அந்த "மனிதன்" சூழல்வாதிகளின் அருவச் சிந்தனையில் மட்டுமே வாழ்வதால், நடைமுறை எதார்த்தத்தில் (இயற்கையாய் அழிக்கிற) அந்த மனிதனிடம் கணக்கு தீர்க்கப்படவுமில்லை. ஆகவே, காலநிலை மாற்றத்திற்கெதிரான ஐநாவின் தீர்மானங்கள், திட்டங்கள் அனைத்துமே கற்பனைக்கெதிரான கற்பனைப் போராட்டங்களே தவிர நடைமுறைக்கும் அதன் தீர்மானங்களுக்கும் துளியும் தொடர்பில்லை!

(ஏடறிந்த/ஏடறியா) மனித சமுதாயத்திற்கு ஒரு வரலாறு இருக்கிறது. தலைமுறைகளின் தொடர் வரிசையாக மனித இனம் தன்னைப் புனர் உற்பத்தி செய்து கொண்டு தனது சொந்த வரலாற்றைப் படைத்துக் கொள்கிறது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக பிரமீடுகளைக் கட்டியே மனித இனமும், விண்வெளியில் செயற்கைக்கோள் ஏவு கிற மனித இனமும் வெவ்வேறு வரலாற்றுக் கட்டங்களைச் சேர்ந்த மனித சமுதாயத்தினர் எனத் துல்லியமாகத் தெரிகிறது. இதில் விடுவிக்கப்படாத புதிர் ஒன்று தொக்கி நின்றது. மனித வரலாற்றை இயக்குகிற சமூக விதி என்ன? என்பதுதான் அந்தக் கேள்வி. பிரமிடு கட்டுவதில் இருந்து செயற்கைக்கோள் விடுகிற அளவிற்குச் சமுதாயம் வளர்ச்சி பெற்றது எப்படி? உண்பது, வாழ்வது என அவனது சொந்த இருத்தல் என்பது எல்லா வரலாற்றுக் கட்டத்தின் மனிதனுக்கும் பொருந்துகிற பொது அம்சம். ஐயாயிரம் ஆண்டுக்கும் முன்பும் தற்போதும்

இதைச் செய்தால்தான் மனிதன் உயிர்பிழைக்க முடியும். இதைத் தவிர மானுட வாழ்க்கையைத் தீர்மானிப்பது என்ன? மானுட வாழ்க்கையை எது இயக்குகிறது?



இந்தக் கேள்விக்கான பதிலானது ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்பாக தத்துவார்த்த ரீதியிலும், அனுபவவாத மெய்நடப்பு மூலமாகவும் தெளிவாக்கப்பட்டுவிட்டது. மனித உணர்வு மனித வாழ்வை தீர்மானிப்பதில்லை. மனித வாழ்க்கை நிலைமைதான் அவனது சொந்த உணர்வைத் தீர்மானிக்கிறது என்று மார்க்சால் இந்தப் புதிர் விடுவிக்கப்பட்டது.

மனிதன் உயிர் பிழைத்தலுக்காக இயற்கையுடன் வினையாற்றுகிறான். தனது சொந்த தேவைக்காக வாழ்க்கைச் சாதனத்தை உற்பத்தி செய்வதில் ஈடுபடுகிறான். இவ்வாறு மனிதன் மெய்யான பொருளாதார வாழ்க்கையை உருவக்கிக் கொள்கிறான்.

மனித உழைப்பின் மேம்பட்ட வளர்ச்சிக் கட்டத்தில் உழைப்புப் பிரிவினை பிரிதலுக்கு இட்டுச்செல்கிறது. பூர்வகுடி சமூகத்தில் இருந்து அடிமைமுறை சமுதாயத்திற்கும், அடிமைமுறை சமுதயாத்தில் இருந்து நிலப்பிரபுத்துவ சமுதாயத்திற்கும் பிறகு வணிக சமுதாயமாகத் தொழில்துறைச் சமுதாயமாக உழைப்புப் பிரிவினையின் வளர்ச்சிப்போக்கு நடைபெறுகிறது. உழைப்புப் பிரிவினையின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களும் அச்சமூகத்தின் உடமை உரிமை உறவையும் வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, பூர்வகுடிச் சமூகத்தில் நிலம், சொத்து பொது உரிமையாகவும் பொது நுகர்வாகவும் உள்ளன. நிலப்பிரபுத்துவ சமுதயாத்தில், உழு கருவிகள், நிலங்கள் பிரபுவுக்கு தனிச்சொத்தாக இருக்கின்றன. தொழில்துறைச் சமுதாயத்தில் நவீன தனியுடமை வளர்த்து ஆலை உரிமையாக, இயந்திர சாதன உரிமையாளராக பண மூலதன உடைமையாளராக முதலாளி தனிச்சொத்து உடைமையின் வடிவமாக நடமாடுகிறார். ஆலைத் தொழிலாளி கூலிக்கு உழைப்பை விற்கிற சொத்தற்ற வர்க்கமாக உள்ளான்.

உழைப்புப் பிரிவினையின் மேம்பட்ட வளர்ச்சியால் தீர்மானிக்கப்படுகிற பொருள் உற்பத்தி முறையானது சமூக

மனிதர்களுக்கு இடையிலான உறவையும் தீர்மானிக்கிறது. நிலப்பிரபுத்துவக் கட்டத்தில் பிரபுக்களும் ஏழை விவசாயியும் உற்பத்தி நடவடிக்கையால் பரஸ்பர சமுதாய உறவு கொள்கிறார்கள். நவீன முதலாளித்துவ பொருளுற்பத்தி சகாப்தத்தில் முதலாளியும் தொழிலாளியும் ஒருவருக்கொருவர் உறவு கொள்ளவேண்டியுள்ளது. இதையே உற்பத்தி உறவு (Production relation) என்ற புதிய சொல்லை அறிமுகம் செய்து விளக்கினார் மார்க்ஸ்.

இப்போது மனிதன் என ஒருவர் பொதுவாக எழுதினால், பேசினால், நாம் கேட்க வேண்டியது எந்த வரலாற்றுக் கட்டத்தைச் சேர்ந்த மனிதன் அவன்? அதாவது அந்த மனிதன் என்ன உற்பத்தி செய்தான்? எப்படி உற்பத்தி செய்தான்? திட்டவட்டமான உற்பத்தியில் ஈடுபட்டுள்ள திட்டவட்டமான சமுதாயத்தின் எந்தச் சமுதாய உறவின் வடிவத்தை வெளிக்காட்டுகிறான். அதாவது நிலப்பிரபுவா? பண்ணையடிமையா? முதலாளியா தொழிலாளியா? பொருளுற்பத்தியில் ஈடுபட்டுள்ள முதலாளியின் வாழ்க்கை நிலைமை வேறு, சொத்தற்ற ஏழை கூலித் தொழிலாளியின் வாழ்க்கை நிலைமை வேறு. இந்த வாழ்க்கை நிலைமையே தொழிலாளியின் இயல்பையும் உணர்வையும் தீர்மானிக்கிறது. முதலாளியின் இயல்பையும் உணர்வையும் தீர்மானிக்கிறது. இருவரின் இயல்பும் உணர்வும் ஒன்றல்ல, செயல்பாடும் ஒன்றல்ல, நீங்கள் கூறுவது எந்த மனிதனை? அம்பானியையா அல்லது ஒப்பந்தத் தொழிலாளியையா?

பரிணாமவிதிக் கோட்பாட்டில் தெளிந்த சூழல்வாதிகள் சமூக வரலாற்று விதியைப் பொறுத்தவரை இன்னும் முன்னேறாமல் 19 ஆம் நூற்றாண்டிலேயே தேங்கி நிற்கின்றனர். ஆக, இவர்களுக்குப் பதில்சொல்ல நாம் அவ்வப்போது 19 ஆம் நூற்றாண்டில் தீர்க்கப்பட்ட விவாதத்திற்குள் செல்லவேண்டியுள்ளது.

பாயபார்க், புருத்தோன் மீதான இரக்கமற்ற விமர்சனத்தின் வழியே கார்ல் மார்க்ஸ் இதைத் தீர்த்தார். பாயபார்க் மனிதனை மன உணர்வில் அடக்கிவிட்டார். மெய்யான "வரலாற்று மனிதன்" என்பதற்குப் பதில் சிந்திக்கிற மனிதனாகச் சுருக்கிவிடுகிறார் என்றார் மார்க்ஸ். வரலாற்று மனிதன் என்பவன் உற்பத்தி நடவடிக்கையால் செயலூக்கமுள்ள மனிதனாக வாழ்கிறான். இவ்வாறு திட்டவட்டமான உற்பத்தியில் ஈடுபடுகிற மனிதன் திட்டவட்டமான சமுதாய உறவுகள் அரசியல் உறவுகளாக வெளிப்படுகிறார்கள்.



பாய்பார்க் பற்றிய ஆய்வுரைகள், ஜெர்மன் சித்தாந்தம் உள்ளிட்ட எழுத்துக்களில் மார்க்சால் தனித்தும் என்கெல்ஸுடன் இணைந்தும் தீர்க்கப்பட்ட இவ்விவகாரங்கள் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் துல்லியமாக எடுத்துரைக்கப்பட்டது. வரலாறென்பது வர்க்கங்களின் போராட்டமே என் இரத்தின சுருக்கமாக சமூக விதியை விளக்கியது. சமூக வரலாற்றை விஞ்ஞானமாக்கியது. அவ்வறிக்கையில் தொகுக்கப்பட்ட சாரத்தின் ஒரு பகுதியைத்தான் மேலே விவரித்தோம். டார்வினின் பரிணாம விதிக் கோட்பாடு மெய்நடப்பில் நிரூபணம் ஆனபின்னரும் குரங்கில் இருந்து மனிதன் பரிணமித்ததை ஏற்காத மத குருமார்களுக்குச் சற்றும் சளைத்தவர்கள் அல்ல நமது சூழல் வாதிகள். ஏனெனில் டார்வினின் பரிணாமக் கோட்பாட்டு விதி இயற்கை வராலாற்றை விஞ்ஞானப் பூர்வமாக்கியதைப் போலவே, சமூக வரலாற்றை விஞ்ஞானம் ஆக்கிய மார்க்சின் சமூக விதிக் கோட்பாடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்பு என்பதை மதகுருமார்கள் போலவே இவர்களும் அறியாதவர்களாக உள்ளனர். இதன் காரணமாக, இயற்கை வரலாற்றை விஞ்ஞானப்பூர்வமாக உள்வாங்கிய டார்வீனிய சூழல்வாதிகள் சமூக வரலாற்றுப் பக்கம் வரும்போதும் மானுட சமுதயாத்தை அதன் எதார்த்தத்தில் இருந்து புரிந்து கொள்ளாமல் அருவ ஊகமாகப் புரிந்துகொள்கிறார்கள். பொதுவாக இவர்கள் வரலாற்றைப் பார்க்கிறபோது பொருள்முதல்வாத கண்ணாடி கொண்டு பார்ப்பதில்லை. பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் பார்க்கிற போது வரலாற்றைக் கவனிப்பதில்லை!

நமது சூழல்வாதிகள், இயற்கை நிலைமையை அழிக்கிற “மனிதன்” எனும் மாய மானை கற்பனையில் வேட்டையாடி களைப்புற்று வருகிறார்கள். நாமோ, வரலாற்று மனிதனாக, செயலூக்கமுள்ள மனிதனாக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மனித சமுதாயத்தின் உற்பத்தித்திறன் வளர்ச்சியின் உள்ளார்ந்த முரண்பாட்டால் தோன்றியுள்ள வர்க்கச் சமுதயாத்தில், முதலாளித்துவ வர்க்கத்தைப் பொது எதிரியாக எதார்த்ததில் உணர்ந்துகொண்டு, உற்பத்தியிலும் அரசு அதிகாரத்திலும் அதன் சமூக மேலாண்மையை நடைமுறையில் வீழ்த்த ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடன் இணைந்தும் சேர்ந்தும் ஒன்றுபட்டும் போராடுகிறோம்.

●

## பஞ்சுமிட்டாய் பக்கம்




நிவேதிதா சரவணன்



பட்டப் பகல் ஆயிடுச்சு... உச்சி வெயில் ஏறிடுச்சு
காக்கா, குருவி குளிச்சிடுச்சு... காலை சாப்பாட்டை முடிச்சிடுச்சு
பட்டுக் குட்டி தூங்குது... போர்த்திக்கிட்டுப் புரளுது
பத்து நானும் எண்ணுவேன்... எழுந்திரிச்சா கொஞ்சுவேன்
ஒன்னு, ரெண்டு, மூணு, நாலு, அஞ்சு, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து !!

*ராஜேஸ் கனகராஜன்*

# Sri Rajalakshmi IT Solutions

**computers and accessories**

15/7, First Floor, West Pattamar Street,
North Avani Moola Street, Madurai - 625 001.

**Sales: 98430 76000**

**Premium Softwares available for**

- Vessels and Appliances Showrooms & Shops
- Departmental Stores & Super Markets
- Jewellery Shops
- Hospital Financial Management System
- Shuttering Products Hiring










**POS Products and Consumables also Available**

**Barcode Printers, Thermal Printers, High Quality Barcode Labels, Ribbons and Thermal Papers**



# செய்து பாருங்கள்




தமிழில்
முதன்முறையாக
கைவினை செய்முறைக்கான
இதழ்!




ஆண்டு சந்தா ரூ. 240 (நான்கு இதழ்கள்)




**தொடர்புக்கு: 99413 79168**

www. seithupaarungal.com
facebook.com/Seithupaarungal/
twitter.com/seithupaarungal